விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 02 சனிக்கிழமை (15.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087




# இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் அமெரிக்காவின் கருத்துக்கு அரசு அதிருப்தி

## நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என அமெ.தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் அண்மையில் அமெரிக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் குறித்து இலங்கை தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றெபேட் ஓ பிளேக்கை நேற்று அழைத்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம அவருடன் இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளார்.** *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## ரூபவாஹினி தொலைக்காட்சியின் பிரதிப் பணிப்பாளர் மீதும் தாக்குதல்

### கண்டித்து நேரடி ஒளிபரப்புக்கள் நிறுத்தம்

(கொழும்பு)

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் அனுரசிறி ஹெட்டிகோவா அடையாளம் தெரியாத குழுவினால் தாக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலைக் கண்டித்து ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேரடி ஒளிபரப்புக்கள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குள் குண்டர்கள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின்பணியாளர்கள் அண்மைக்காலமாக அடையாளம் தெரியாத நபர்களின் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இந்தியாவின் அதிகாரப் பகிர்வு யோசனை தமிழீழக் கோரிக்கைக்கு மறைமுக ஆதரவு

### விஜித ஹேரத் எம்.பி. பேட்டி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை முன்வைக்கும் யோசனைக்கு இந்தியா பின்னணியில் இருப்பதுடன் இந்த யோசனை விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்குச் சாதகமாக அமைந்து விடும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அதிகாரப் பகிர்வு யோசனை விடுதலைப்புலிகளின் தமிழீழக் கோரிக்கைக்கு மறைமுக ஆதரவானது என இந்தியா சென்றிருந்த விஜித ஹேரத், இன்டோ ஏசியா செய்திச் சேவைக்கு வழங்கியிருக்கும் செவ்வியில் கூறினார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கப் படைகள் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றது. 1983 ஆம் ஆண்டு முதல் இடம்பெறும் மோதல்களில் 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட நிலையில் இந்தியாவும் மேற்கத்தைய நாடுகளும் அரசியல் ரீதியான தீர்வொன்றை இலங்கை முன்வைக்க வேண்டும் எனக் கோருவது ஆத்திரமூட்டுவதாகவுள்ளது.

இவ்வாறு அரசியல் தீர்வொன்றை முன்வைக்க முன்னர் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோற் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## கொழும்பில் தலையும்; முண்டம் முல்லேரியாவிலும் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பொரளையில் உடல் இல்லாத தலை ஒன்று நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டது. அந்தத் தலைக்குரிய உடல் முல்லேரியாப் பகுதியில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

பொரளையில் அரசாங்க அச்சகத்துக்கு முன்னால் பாதுகாப்பு அதிகமான வீதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்த உடல் அற்ற தலை தனியே வீசப்பட்டுக் கிடந்துள்ளது.

இதனால் அப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இந் நிலையில் நேற்றுக் காலை முல்லேரியாக் ஹல்பராவ *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## தாய்வானின் 'விடுதலை' வாக்கெடுப்பு இலங்கை அரசாங்கம் கவலை

(கொழும்பு)

தாய்வானின் விடுதலைக்கான வாக்கெடுப்பு நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் கவலை கொள்வதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு, ஒரே சீனா என்ற நிலைப்பாட்டில் இலங்கை உறுதியாகவுள்ளது. தாய்வான் எந்த வகையிலும் சுதந்திரம் அடைவதையும் சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களில் பங்கேற்பதையும் இலங்கை எதிர்க்கின்றது.

அத்தகைய நடவடிக்கையானது ஐ.நா. மற்றும் சர்வதேச நடைமுறைகளுக்கு எதிரானது. சீனா மற்றும் தாய்வான் முழுமைக்கான சட்டபூர்வ *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இந்தியாவின் ஆயுத உதவியைக் கண்டித்து புதுவையில் மார்ச் 21இல் கண்டனக் கூட்டம்

(சென்னை)

இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி செய்வதனைக் கண்டித்து புதுவை யூனியன் பிரதேசத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

புதுவை பிரதேச பெரியார் திராவிடக் கழகத்தின் ஒழுங்கிணைப்பில் அரியாங்குப்பம் பெரியார் திடலில் இக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்திற்குப் புதுவை பிரதேச பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு ஐயப்பன் தலைமை வகிக்கிறார். தமிழ்நாடு பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கௌத்தூர் மணி, திரைப்பட இயக்குநர் சீமான், தமிழ்நாடு தலைமை நீதிமன்ற *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்புமனுக் கோர முடிபு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக இம் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 3 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரையும் வேட்புமனுக்களைக் கோரவுள்ளதாகத் தேர்தல் செயலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாகத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல்கள் முடிபடைந்த பின்னர் கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் 35 உறுப்பினர்கள் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படுவர். (ச-5)

## யாழ்ப்பாணம் நோக்கி வந்த படகு மீது துப்பாக்கிச் சூடு

### ஒருவர் பலி; மற்றொருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நோக்கி வந்த படகு ஒன்றின் மீது கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

மேலும் ஆறு பேர் எந்தவித காயங்களுமின்றி உயிர் தப்பினர். சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, கிளிநொச்சியிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 8 பேர் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் நோக்கிப் படகில் வந்துள்ளனர்.

இவர்களைக் கண்ட கடற்படையினர் அல்லைப்பிட்டிக் கடற்பரப்பில் வைத்து அப் படகு மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் செல்வராசா கோடீஸ்வரன் என்பவர் உயிரிழந்தார். கந்தசாமி சுதாகரன் (வயது-28) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப் படகில் வந்த மேலும் இரு பெண்கள் ஒரு கைக்குழந்தை, படகோட்டி மற்றும் இரு இளைஞர்கள் ஆகியோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் பொலிஸாரின் காவலில் உள்ளனர். இதேவேளை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா மேற் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# க.பொ.த உயர் தரத்தில் 3 A பெற்று இன்று கௌரவம் பெறும் மாணவர்களை வாழ்த்துகின்றோம்

| NAME | SCHOOL | STREAM | NAME | SCHOOL | STREAM |
|---|---|---|---|---|---|
| Mr.T.Ajanthan | J/Hindu College, Jaffna | Maths | Mr.K.Thananchayan | Manipay Hindu College | Maths |
| Mr.S.Vithoosan | J/Hindu College, Jaffna | Bio | Ms.R.Kokilavani | J/Methodist Girls College Point pe. | Arts |
| Mr.S.Sobisan | J/Hindu College, Jaffna | Maths | Ms.R.Tharshini | J/Methodist Girls College Point pe. | Arts |
| Mr.S.Matheesan | J/Hindu College, Jaffna | Commerce | Ms.T.Thirumahal | J/Methodist Girls College Point pe. | Commerce |
| Mr.S.Kokulan | J/Hindu College, Jaffna | Bio | Ms.R.Rajaranga | J/Methodist Girls College Point pe. | Arts |
| Mr.P.Pushparuban | J/Hindu College, Jaffna | Maths | Mr.K.Mathivathanan | J/ST.John's College | Bio |
| Mr.B.Janarththanan | J/Hindu College, Jaffna | Maths | Mr.B.Shiyanthan | J/ST.John's College | Maths |
| Mr.M.Brinthaban | J/Hindu College, Jaffna | Maths | Mr.S.Sivamainthan | J/ST.John's College | Commerce |
| Mr.S.Elamaran | J/Hindu College, Jaffna | Maths | Mr.R.Anushankan | J/ST.John's College | Commerce |
| Mr.V.Yogatheesan | J/Hindu College, Jaffna | Maths | Ms.N.Pushpam | Kodikamam Thir. Maha vidyalayam | Arts |
| Ms.K.Kalaivathani | J/Vembadi Girls' College | Arts | Mr.S.Nimalan | J/Hartley College, Point pedro | Bio |
| Ms.T.Thulasi | J/Vembadi Girls' College | Arts | Mr.R.Niruban | J/Hartley College, Point pedro | Arts |
| Ms.S.Neerajapriya | J/Vembadi Girls' College | Maths | Mr.V.Rajeevan | J/Hartley College, Point pedro | Maths |
| Ms.F.Mary Anusha | J/Vembadi Girls' College | Bio | Mr.S.Sarankan | J/Hartley College, Point pedro | Maths |
| Ms.R.Tharani | J/Vembadi Girls' College | Commerce | Mr.S.Sanganathan | J/Hartley College, Point pedro | Arts |
| Ms.J.Ivanjalin Mirnalini | J/Vembadi Girls' College | Bio | Mr.S.Archchan | J/Hartley College, Point pedro | Bio |
| Ms.S.Shakila | J/Vembadi Girls' College | Bio | Mr.R.Gowsigan | J/Hartley College, Point pedro | Arts |
| Ms.S.Sasikala | J/Vembadi Girls' College | Bio | Mr.V.Ramanan | J/Vigneswara College, Karaveddy | Arts |
| Mr.Y.Mathanprasanna | J/Central College | Commerce | Ms.J.Mary Rubina | J/Vigneswara College, Karaveddy | Arts |
| Mr.P.Sabeskumar | J/Central College | Commerce | Mr.T.Lukshan Neethiraja | Kopay Christian College | Arts |
| Mr.K.Vijayaraj | J/Central College | Commerce | Ms.S.Varnasri | J/Vada Hindu Girls College | Arts |
| Ms.S.Vithiya | J/Chundikuli Girls' College | Arts | Ms.K.Nishany | J/Vada Hindu Girls College | Arts |
| Ms.N.Premini | J/Chundikuli Girls' College | Commerce | Ms.M.Sinthuja | J/Hindu Ladies College | Commerce |
| Ms.N.Thaksamini | J/Chundikuli Girls' College | Arts | Ms.S.Sivarubini | J/Hindu Ladies College | Commerce |
| Ms.M.Raji | J/Chundikuli Girls' College | Arts | Ms.J.Saranya | J/Hindu Ladies College | Arts |
| Ms.K.Thulasika | J/Chundikuli Girls' College | Arts | Ms.M.Vino | J/Hindu Ladies College | Arts |
| Ms.U.Umaiyal | J/Chundikuli Girls' College | Arts | Mr.J.Terranson | J/Vaddu Hindu College | Maths |
| Ms.R.Sakthiyankani | J/Chundikuli Girls' College | Arts | Ms.L.Nivethika | Manipay Ladies College | Arts |
| Ms.M.Vijitha | Jaffna College Vadducoddai | Arts | Mr.R.Sayanthan | J/Udupiddy A.M. C., Velvetithurai | Maths |
| Mr.J.Jeyamohan | J/ Varany Maha Vid., Varany | Arts | Mr.S.Pirashanth | J/Udupiddy A.M. C., Velvetithurai | Maths |
| Mr.S.Niloshan | J/A. A. M. Tamil Mixed School | Arts | Ms.G.Sukirtha | J/Udupiddy A.M. C., Velvetithurai | Maths |
| Mr.K.Kajanthan | J/Kokuvil Hindu College | Maths | Ms.T.Selvamalai | J/Udupiddy A.M. C., Velvetithurai | Arts |
| Mr.S.Manjuthan. | J/Kokuvil Hindu College | Commerce | Mr.S.Kirubakaran | J/St.Patrick's College, Jaffna | Arts |
| Mr.S.Dineshkumar | Thellippalai Union College | Arts | Mr.K.Sanjeevan | J/Victoria College | Maths |
| Mr.S.Jeyaneethan | Thellippalai Union College | Maths | Ms.K.Thayalini | J/Uduvil Girls College | Arts |
| Ms.K.Keerthana | Thellippalai Union College | Arts | Ms.S.Dalrin | J/Uduvil Girls College | Arts |
| Ms.B.Jenad Sutharshini | Thellippalai Union College | Arts | Ms.V.Hanitha | J/Alaveddy Arunodaya College | Commerce |
| Mr.A.Karthik | Chavakachcheri Hindu College | Maths | Ms.S.Suhasini | J/Thevaraiyali H. C., Karaveddy | Arts |
| Mr.J.Mohanakanth | Chavakachcheri Hindu College | Maths | Mr.S.Pirasath | J/Velautham Maha Vidyalayam | Arts |
| Ms.S.Ilakiya | Chavakachcheri Hindu College | Commerce | Ms.T.Anitha | J/Gnanasariyar College Kara. | Arts |
| Ms.P.Renosha | Chavakachcheri Hindu College | Commerce | Ms.K.Suganya | J/Mahajana College Thellipalai | Arts |
| Ms.K.Kirubakary | Chavakachcheri Hindu College | Commerce | Mr.N.Baskaran | J/Skandavarothaya College Chun. | Arts |
| Ms.A.Inthusha | Chavakachcheri Ladies College | Arts | | | |

மூலம்:- இலங்கை வங்கி யாழ்ப்பாணம்


## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள /மாவட்ட நீதிமன்றத்தில்
எட்னா கனகேஸ்வரி பாலச்சந்திரன்,
251,பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வழக்கு இல. மணநீக்கம்/831

எதிர் வழக்காளி

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன், 'எல்வின்'
காங்கேசன்துறை வீதி, இணுவில்,
யாழ்ப்பாணம்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

தனக்கும், எதிராளிக்கும் இடையே 15.7.1974ந் திகதியன்று இடம்பெற்ற திருமணப்பதிவினை ரத்துச் செய்வதற்காக-

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2008 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**நீதிமன்றக் கட்டளைப்படி**

**வரையப்பட்டது,** **து.சிறீமோகன்**
**பதிவாளர்**

**வழக்காளியின் சட்டத்தரணி** **மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

*குறிப்பு:-* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்**
**கையொப்பம்,**
**பதிவாளர்.**

2008 ஆண்டு 03ஆம் மாதம் 14ஆந் நாளாகிய இன்று

(945)

# கொழும்பு கம்பன்கழக இசைவேள்வியில் டாக்டர் எஸ்.கே.மகேஸ்வரன் புலமைப்பரிசில்

(கொழும்பு)

கொழும்பு கம்பன்கழகம் நடாத்தும் ஸ்ரீராமநாம கானாமிர்தம் இசை வேள்வியில் அமரர் டாக்டர் மகேஸ்வரன் அவர்களின் ஞாபகார்த்தமாக, இலங்கைப்பல்கலைக்கழகங்களில் கற்கும் மருத்துவபீட மாணவர்கள் மூவர்க்கும் நுண்கலைப்பீட மாணவர்கள் மூவர்க்கும் புலமைப்பரிசில்களை வழங்க இவ்வாண்டு முதல் டாக்டர் மகேஸ்வரன் அவர்களின் குடும்பத்தார் முன்வந்துள்ளனர்.

இப்பரிசில்கள் கொழும்பு கம்பன் கழகத்தினூடாக வழங்கப்படவுள்ளன. இப்புலமைப்பரிசில் களுக்கான விண்ணப்பங்கள் பத்திரிகையின் மூலம் கோரப்பட்டிருந்தன. புலமைப்பரிசிலுக்காக விண்ணப்பித்தவர்களில் அறுவரை கம்பன் கழகத்தின்சிபாரிசின்பெயரில் 'டாக்டர் மகேஸ்வரன் புலமைப்பரிசில்களுக்காக' அவர் தம் குடும்பத்தார் தேர்ந்தெடுத்துள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு ஓராண்டுக்கு மாதாந்தம் ரூபா 3000 உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. மருத்துவத்துறை மாணவர்களான யாழ்ப்பாணம் ஜனனி தவராஜா (யாழ்.பல்கலைக்கழகம்), ஊர்காவற்றுறை கணேஸ்வரன் தனேசன் (கொழும்பு பல்கலைக்கழகம்), கரவெட்டி துஷ்யந்தி ஆனந்தலிங்கம் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரும், நுண்கலைத்துறை மாணவர்களான கிளிநொச்சி தவராசா நித்தியா (சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவனம்), மன்னார் அந்தோனி வேளாங்கண்ணி றோஸ் (சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவனம்), மட்டக்களப்பு மார்ஷலினோ ஞானப்பிரகாசம் தானியா பிரியாந்தினி (சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவனம்) ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசிலின் ஆரம்பக் கொடுப்பனவும் சான்றிதழும் மார்ச் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இசைவேள்வியின் ஏழாம் நாள், டாக்டர் எஸ்.கே.மகேஸ்வரன் நினைவரங்கில் கொழும்பு கம்பன் கழகப் பெருந்தலைவர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் வழங்கப்படும்.

புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களை 2360525 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் கொழும்பு கம்பன் கழகத்தினரோடு தொடர்பு கொள்ளுமாறு கம்பன் கழகச்செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-5)

## பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தபாலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் புங்குடுதீவு தபாலதிபர் எஸ்.கணேசமூர்த்தியை கௌரவிக்கும் முகமாக புங்குடுதீவு தபாலக ஊழியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரிவுபசார விழா இன்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு தபாலகத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு தபாலதிபர் திருமதி ஜே.சுமித்திராதேவி தலைமை தாங்குகின்றார். (ச)


**மேரி திருமண நிலையம்**

வெளிநாட்டில் வசிக்கும் P.R உடைய Non R.C., R.C., இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை 1962 -1985க்கு உட்பட்டவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ச.உமாச்சந்திரன்**
**46, புதுவீதி, கொய்யாத்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**
(938) T.P:-0779116346



**விற்பனைக்கு**

**வீடு, கடையுடன் கூடிய ஒரு பரப்புக் காணிவிற்பனைக்கு உண்டு**

***தொடர்பு:-***
**373, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(942)


## மெய்வல்லுநர் போட்டி

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில், கல்லூரி அதிபர் திருமதி சீதா சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். உஷா வரதீஸ்வரன் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ச-19)

## பங்குனித் திங்கள் உற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர (கண்ணகி அம்மன்) ஆலயத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒவ்வொரு பங்குனித் திங்களும் மாலை 3 மணிக்கு கும்ப பூஜையுடன் ஆரம்பமாகி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

அத்துடன் அடியார்கள் பொங்கல் செய்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. (அ-5)

# இன்று ஒரு தகவல்

## தானம்

இராமாயணத்தைச் சம்பந்தப்படுத்தி எத்தனையோ பழங்கதைகள் உண்டு. அவற்றிலும் சில நயங்கள், கருத்துக்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு கதை இது.

இலங்கையிலே இராம–இராவண யுத்தம் முடிவடைந்து விட்டது. இராமர் இலங்கையை ஏற்கெனவே வாக்களித்தபடி விபூஷணனுக்குத் தானமாகக் கொடுத்து விட்டார். விபூஷண பட்டாபிஷேகம் முடிவடைந்ததும் எல்லோரும் அயோத்திக்குப் புறப்படுகிறார்கள். பயண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுதுதான் அந்த அம்மிக்கல்லின் ஞாபகம் சீதைக்கு வருகிறது. அசோகவனத்திலே ஒரு அபூர்வமான அம்மிக்கல் இருந்தது. அதில் ஒரு பொருளை வைத்து அரைத்தால் அதனுடைய இயற்கை வாசனை மேலும் அதிகமாகுமாம்! அந்தப் பொருளின் தரமும் குணமும் கூடுமாம்! அந்த அம்மிக்கல்லின் குணவிசேஷத்தை அசோகவனத்தில் திரிகடை சொன்ன பொழுதே சீதையின் மனதில் ஒரு சின்ன ஆசை அயோத்திக்குப்போகும் போது அதைக் கொண்டு போக வேண்டுமென்று! அதை எப்படிக் கொண்டு செல்வது என்று சீதை யோசிக்கிறார். உடனே அனுமார்தான் இதற்குப்பொருத்தமான ஆள் என்று தோன்றுகிறது. உடனே அனுமாரைக் கூப்பிட்டு அந்தக் கல்லை எப்படியாவது அயோத்திக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விட வேண்டும் என்கிறார்.

சஞ்சீவி மலையையே பெயர்த்தெடுத்த அனுமாருக்கு இது ஒரு பெரிய வேலையா? தரையிலே பதிந்திருந்த அந்த அம்மிக்கல்லை தூக்கியெடுக்க முயற்சிக்கிறார். அந்த நேரத்திலே ஜாம்பவான் அந்தப் பக்கமாக வந்தார். எல்லோரும் அயோத்திக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது நீ இந்தக் கல்லை ஏன் கிளப்பி எடுக்க முயற்சிக் கிறாய்? என்று கேட்டார். இது சீதா பிராட்டியாரின் ஆணை என்றார் ஆஞ்சநேயர். ''சீதையா இப்படி ஆணையிட்டார்?'' என்று கேட்ட ஜாம்பவான் நேராகச் சீதையிடம் போனார். "உங்கள் கணவர் இலங்கையை விபூஷணனுக்குத் தானமாகக் கொடுத்து விட்டார். ஒரு பொருளைத் தானமாகக் கொடுத்துவிட்டால் அதைத் திரும்ப வாங்கக்கூடாது. தானம் வாங்கியவனே தருகிறேன் என்று சொன்னாலும் வாங்கக் கூடாது. அப்படிச் செய்தால் தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியம் கிடைக்காமல் போய்விடும்!'' இராமபிரான் பெற்ற பெரிய புண்ணியம் அற்பமான அம்மிக்கல்லால் இல்லாமல் போய்விடக்கூடாதே என்று பயப்படுகிறேன் என்றார்!

''சரியான நேரத்திலே உண்மையைச் சொல்லி பெரிய பாவச் செயலிலிருந்து என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள். எங்கள் புண்ணியம் உங்களால் காப்பாற்றப்பட்டது'' என்றார் சீதை. ''கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்'' என்பார்கள். அதை உங்கள் மூலம் தெரிந்து கொண்டேன் என்றாராம் அனுமார். நீ ''சொல்லின் செல்வன் என்பதை நிரூபித்துவிட்டாய்'' என்றாராம் ஜாம்பவான். இது ஒரு பழங்கதை. தானமாகக்கொடுத்த எதையும் திரும்ப வாங்க வேண்டுமென்று ஆசைப்படாதே! என்ற உண்மையை இதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

தானமாகக் கொடுத்ததை திரும்ப வாங்குவதும் தப்பு! அதேமாதிரி தானமாக வாங்கியதை தரம் பார்ப்பதும் தப்பு. ஒரு பசுமாட்டை நமக்கு ஒருவர் தானமாகக் கொடுக்கிறார். கொடுத்தவரிடமே இது காலையிலே எவ்வளவு கறக்கும், மாலையிலே எவ்வளவு கறக்கும் என்று கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது. "தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பாராதே என்று ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? அதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா? தானமாகக் கிடைத்த மாட்டின் பல்லைப்பார்த்து அது நல்லமடி? அதற்கு எத்தனை வயது–என்று பரிசோதித்துப் பாராதே என்பது தான் அதன் அர்த்தம். மாட்டின் வயதை அதற்கு எத்தனை பல் இருக்கிறது என்று பார்த்துத்தான் கண்டுபிடிப்பது வழக்கம். அப்படிச் சோதித்தால் அது தானம் கொடுத்தவனுக்கு மரியாதையில்லை.

எனக்குத் தெரிந்த ஒருவர் ஒரு பசுமாட்டை ஒருவருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டார். அதன்பின் அவர் சொன்னார்– "நான் தானமாகக் கொடுத்த அந்தமாட்டை அவன் பல்லைப் பிடித்துப் பார்த்தாலும் கவலையில்லை" என்றார். "ஏன்?" என்று கேட்டேன்.

பல்லெல்லாம் விழுந்த பிறகுதானே அதை தானமாகக் கொடுத்திருக்கிறேன். அந்தப் பசுமாட்டினால் இனி எனக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்று தெரிந்த பின் தானே அதைத் தானமாகக் கொடுத்திருக்கிறேன் என்றார் வெகு சாவகாசமாக.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையில் காணாமல் போனோரின் நிலை இன்னமும் புரியாத புதிராக நீடிக்கிறது

## கனேடிய ஊடகமான 'நசனல் போஸ்ட்' தெரிவிப்பு

***இலங்கையில் காணாமல் போனோரினது நிலை இன்னமும் புரியாத புதிராக நீடிக்கிறது என்று கனேடிய ஊடகமான ''நசனல் போஸ்ட்'' தெரி வித்துள்ளது.***

***''நசனல் போஸ்ட்'' வெளியிட்டிருக்கும் கட்டுரை:***

இலங்கையின் வடக்கு நகரமான வவுனியாவில் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வீட்டிலிருந்து சைக்கிளில் புறப்பட்ட அன்ரன் சூசைப்பிள்ளை என்பவர் இதுவரையில் வீடு திரும்பவில்லை.

மூன்று நாட்களுக்குப் பின்னர், சூசைப் பிள்ளை பத்திரமாக திரும்பி வரவேண்டுமானால் கப்பமாக பணம் வழங்கப்பட வேண்டும் என்று தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுக் கப்பட்டது.

அவரது குடும்பத்தார் மூன்று மில்லியன் ரூபாவை தேடுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டனர். எனினும் அவர்களால் குறித்த முழுத் தொகையையும் திரட்ட முடியாது போனது. திரட்டிய பணத் தொகையை வைத்துக் கொண்டு அவரை விடுவிக்குமாறு குடும்பத்தினர் கடத்தல்காரர்களிடம் வேண்டிக் கொண் டனர்.

இறுதியில் அந்த வேண்டுதல் பயனற்ற தாகவே போய்விட்டது. அன்ரன் சூசைப்பிள்ளை உயிரோடு இருக்கிறாரா அல்லது உயிரோடு இல்லையா என்பது குறித்து தெரியவில்லை என்று அவரது மைத் துனர் அன்ரனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீண்டும் போர் ஆரம்பித்த கடந்த இரண்டு வருடங்களாக நூற்றுக் கணக் கானோர் காணாமல் போனோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப் பகம் தெரிவித்துள் ளது.

வீடுகளில் இருந்தபோதோ அல்லது இராணுவ சோதனைச் சாவடிகளிலோ அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படு கின்றனர். 2005 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை 1, 500 பேர் காணாமல் போனவர்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்துலக மனித உரிமைகள் கண் காணிப்பகம் இத்தகைய 99 சம்பவம் தொடர் பாக பதிவு செய்துள்ளது. எனினும், இலங்கை யில் இயங்கும் மனித உரிமை அமைப்புகள் பலநூறு பேர் காணாமல் போய் உள்ளதாகத் தெரிவிக்கின்றன.

சிலர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது மற்றும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், பலர் பற்றிய தகவல்கள் இதுவரை யில் புரியாத புதிராகவே நீடிக்கின்றது.

அநேகமான சந்தர்ப்பங்களில் இந்த சம்ப வங்களுடன் இலங்கை இராணுவத்திற்கு தொடர்புள்ளதாக அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் இலங்கை மனித உரிமை அமைப்புக்கள் முதலியன தெரிவிக்கின்றன. கடத்தப்பட்டவர்களில் சிலர் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களாகவோ அல்லது ஆதரவாளர்களாகவோ இருக்கலாம்.

எனினும், இதன்மூலம் உரிய நடைமுறை களற்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களை நியாயப் படுத்த முடியாது என்று அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டு கின்றன.

ஜனவரி மாதம் 2ஆம் திகதி அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கை அதிகாரபூர்வ மாக இரத்துச் செய்யப்பட்டதாக அனைத்துலக கண்காணிப்பாளர்களுக்கு அறிவித்தது.

அதனைத்தொடர்ந்து நாளாந்தம் வடக்குப் பகுதியில் அரசாங்கப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன. மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்கள், பேருந்து குண்டுத் தாக்குதல் மற்றும் அரசியல் படுகொலைகள் போன்றவற்றை மேற்கொள்கின்றனர்.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள கனடாவில் இந்தப் போரின் எதிரொலியை உணரக் கூடியதாக உள்ளது. ரொறன்ரோவில் வசிக்கும் அநேகமானோரின் சொந்தங்கள் இன்னும் தாய் மண்ணில் வாழ்ந்து வரு கின்றனர்.

எனவே இலங்கையின் நிலைமைகள் குறித்து கனேடிய தமிழ்ச் சமூகம் மிக விழிப்புடன் காணப்படுகிறது. விடுதலைப் புலிகளின் இரண்டாம் நிலைத் தலைவர் படுகொலை செய்யப்பட்டதன் போது ரொறன்ரோவில் கொட்டும் மழையிலும் மக்கள் அணிதிரண்டு வணக்கம் செலுத்தினர்.

கனேடிய தமிர்களின் செயற்பாடுகள் குறித்த கனேடிய புலனாய்வுப் பிரிவினர் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

தாய் நாட்டில் வசிக்கும் எமது சொந்தங் கள் பற்றி நாங்கள் மிக உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாக கனேடிய தமிழ் காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலப் பிள்ளை தெரிவித்துள்ளார்.

பச்சை தேயிலை விளையும் செழிப்பான தாய் மண்ணில் தற்போது கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் படுகொலைகள் இடம்பெறுவதாகவும் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தின் மூலம் இந்த செயற்பாடுகளுக்கு இராணுவத்தினருக்கு வழிவகைகள் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளதாகவும் அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

எனினும், இந்த நிலைமை தொடர்பாக அரசாங்கம உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளத் தவறியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பாக இதுவரையில் படைத்தரப்பில் எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் 2008 ஆம் ஆண்டில் இந்த நிலைமை மேலும் மோசமடையக் கூடும் என்று அனைத்துலக நாடுகள் எச்சரிக்கைவிடுத்துள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–5)

# இராசிபலன்

15.03.2008
(பங்குனி 02, சனிக்கிழமை)
அட்டமி காலை 06.45 மணிவரை
நவமி பின்னிரவு 04.40 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 5.00 மணிவரை
இராகுகாலம் 09.20–10.50 மணிவரை
சுபநேரம்–03.20–04.50மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, சகோதரர் உதவி. |
| இடபம் | விவாதம், மாதர் நட்பு, மனச் சோர்வு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, சத்துருஜெயம், உடல் நலம், புதிய முயற்சி. |
| கடகம | காரிய அலைச்சல், ரோகநிலை, பேராசை, தனவிரயம். |
| சிங்கம் | பெருமையடைதல், இஷ்டசித்தி, பொருள் சேர்க்கை. |
| கன்னி | நல்ல செய்தி, புதிய திருப்பம், அதிகாரம், தொழில் நன்மை. |
| துலாம் | கட்டுப்படுத்தல், தந்தை வழி உறவு, பிரயாணம், வீண்பயம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பணக்குறைவு. |
| தனுசு | சௌக்கிய விருத்தி, களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரியசித்தி. |
| மகரம் | மனமகிழ்ச்சி, சத்துருஜெயம், போசனசுகம், நோய்குணமடைதல். |
| கும்பம் | கௌரவக்குறைவு, செய்தொழில் விருத்தி, நோய் குணமடைதல். |
| மீனம் | உடல் நலக்குறைவு, மனப்பயம், முயற்சி தாமதம், பணவிரயம். |

வளவன்

# கல்வி நிர்வாக சேவை முதலாம் தரத்துக்கு நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே பதவி உயர்வு

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பில் உத்தியோகத்தர்களுக்கான தேவைநிறையவே காணப்படுவதாகவும் இதற்கான வெற்றிடங்கள் கல்வி அமைச்சினால் நிரப்பப்படாமல் இருப்பதாகவும் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளது தொடர்பாக கல்வி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சேவை மூப்பு அடிப்படையில் கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றுக்கான நேர்முகப்பரீட்சைகள் மேற்கொள்ளப்படவில்லையென ஒரு சில கல்வி நிர்வாக சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கிற்கான தீர்ப்பு இதுவரை வழங்கப்படவில்லை. இதே வேளை 2005ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி நிர்வாக சேவை தரம் மூன்றில் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மேலும் 77 பேர் கல்வி நிர்வாக சேவை வகுப்பு மூன்றுக்குள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். (அ–5)

# யாழ்ப்பாண மக்கள் சட்ட திட்டங்களை மதித்து

# பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வல்லவர்கள்

## வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் லோறன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் சட்ட திட்டங்களை மதித்து பொதுச் சொத்துக்களை பாதுகாக்க வல்லவர்கள் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.லோறன்ஸ் தெரிவித்தார்.

இதனாலேயே பெரும்பாலானோர் தமது வரிகளை தவறாது செலுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்நேற்றுமதியம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி சபைகள் மக்களை ஊக்கப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி சேவைகளை வழங்க வேண்டும்.

அத்துடன் மக்களின் ஆதரவுடன் அவர்களிற்கு விருப்பமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். யாழ். மாவட்டத்தைப் பொறுத் வரை சில உள்ளூராட்சி சபைகள் தமது வருமானத்தை ஈட்டமுடியாமல் அமைச்சின் நிதி மூலமே சம்பள மீளாய்வுத் தொகையைப் பெறுகின்றன.

எனினும் யாழ்.மாவட்டத்திலுள்ள நகர சபைகளான சாவகச்சேரி 49 வீத வருமானத்தையும்,பருத்தித்துறை52 வீத வருமானத்தையும், வல்வெட்டித்துறை 32 வீத வருமானத்தையும் கடந்த ஆண்டு சேகரித்துள்ளதுடன் 13 பிரதேச சபைகளும் 72 வீத வருமானத்தை சேகரித்துள்ளது. இதனை ஒப்பிடுமிடத்து யாழ்ப்பாண மக்கள் சட்டதிட்டங்களை மதித்து ஏற்று நடக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

### யாழ். மாவட்டத்திற்கு 4 மிருக வைத்தியர்கள் தேவை

யாழ். உள்ளூராட்சி சபைகளுக்கு என 4 மிருக வைத்திய அதிகாரிகள் தேவையென மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளேன்.

அவ் வைத்தியர்கள் நியமிக்கப்பட்டால் இறைச்சி வெட்டுவதற்கான அனுமதிகளை பரிசோதித்தல் மற்றும் விலங்கு விசர் தடுப்பு மருந்துகளை ஏற்றல் ஆகியவற்றை அவர்கள் மேற்கொள்வர்.

### யாழ் . மாவட்டத்திற்கு தார் எடுத்துவரப்பட வேண்டும்

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட வீதிகளை புனரமைப்பதற்கு தார் எடுத்துவரப்படுவதில் பிரச்சினையுள்ளது.

ஏனைய பொருட்கள் போல் யாழ்.அரச அதிபர் ஊடாக அரசாங்கக் கப்பலில் எடுத்து வருவதற்கு நாம் விரும்புகின்றோம்.

அல்லாவிடின் தனியார் ஒருவரோ அல்லது யாழ். வணிகர் கழகமோ தாரை எடுத்து வருமாயின் அரசாங்க சட்ட திட்டங்களுக்கமைவாக அவர்களால் எடுத்து வரப்பட்ட தாரை யாழ். அரச அதிபரால் விலை நிர்ணயிக் கப்பட்டு அதனை கொள்வனவு செய்யநடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக ஏ-9 பாதை மூடப்பட்ட பின் 2006 ஆம் ஆண்டிற்குரிய தார் கூட இது வரையில்யாழ்ப்பாணத்திற்குவந்துசேரவில்லை.

### தீயணைப்பு சேவை விரைவில் சீர் செய்யப்படும்

யாழ் மாநகர சபைக்கு புதிய தீயணைப்பு வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்குரிய நகல் ஒன்றை மாநகரசபை ஆணையாளரிடம் கோரியுள்ளேன். அது என்னிடம் கிடைத்தால் புதிய வாகனம் ஒன்றை வெளிநாடு ஒன்றிலிருந்து அன்பளிப்பாகப் பெற சந்தர்ப்பமுண்டு. அத்துடன் தற்போதுள்ள வாகனத்தைப் பயன்படுத்தி இயலுமான வரை சேவையை வழங்கக்கூடிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

### பொது நுலகங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள 58 பொது நுலகங்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டஙகளை முன்வைத்துள்ளேன். முதல் நடவடிக்கையாக நூலக ஆலோசனைக் குழுவை நியமித்தல், பின்னர் க. பொ.த உயாத்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்களை நூலகத்தை பயன்படுத்த வைத்தல், மூன்றாவதாக மாவட்ட மட்டத்தில் நூலக ஆலோசனைக் குழுவை நிறுவுதல். இதனூடாக நூலகங்களின் பாவனையை பெருக்கி வளமான எதிர்கால சந்ததியை வளர்த்தெடுக்கலாம் என்றார்.

### வீதிச் சமிஞ்ஞைகள் புனரமைக்கப்படும்

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட வீதிகளில் போக்குவரத்து சமிக்ஞைகளை புனரமைத்தல் அல்லது புதிதாக இடல் என்பவற்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என அவர் கூறினார்.

### சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பாக நடவடிக்கை

சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைத்தல் அல்லது மதில் அமைத்தல் தொடர்பாக அப் பிரதேச சபை செயலாளர்களே கட்டுப்படுத்த வேண்டும்.

அத்துடன் மக்களும் அவற்றை அமைக்காமல் அதனை எவ்வாறு செய்யவேண்டுமென விளக்கமளிக்கும் வகையில் நிகழ்ச்சித் திட்டமொன்றை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### நிதியொதுக்கீட்டில் பாரபட்சமில்லை

வடமாகாண சபையின் வழமையான நிதியொதுக்கீடு யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்படுகின்றது. அந் நிதிகள் சீராகப் பயன்படுத்தப்படுகின்றது என்றார் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.லோறன்ஸ். (அ-5)

## சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர் III

யாழ்ப்பாணப் பல்லைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் III இன்று சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி க. அருள்மொழி தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரையினை யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார் "புற்றுநோய்த் தாக்கமும் அதனை எதிர்கொள்ளலும்" எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ-7)

## உள்ளூர் உற்பத்திகளை தென்பகுதிக்கு அனுப்புதல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை தென்பகுதிக்கு கப்பல் மூலம் அனுப்புவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 11.03.2008 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், கப்பல் கம்பனி முகவர்கள், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பும் முகவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இக் கலந்துரையாடலில்வெங்காயம், புகையிலை, வாழைப்பழம் என்பவற்றின் ஏற்றுமதி தொடர்பாக ஆராயப்பட்டது. இக் கலந்துரையாடலில் கப்பல் கட்டணம் அதிகமாக காணப்படுவதால் அதனை உற்பத்தியாளர்களின் கொள்வனவு விலையில் மாற்றம் செய்வதன் மூலமே சீர்செய்வதாக உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஏற்றும் முகவர்கள் கருத்துத் தெரிவித்த போது யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தினர் தாம் குறைந்த கட்டணத்தில் மெற்றிக் தொன் ஒன்றுக்கு 55 டொலர் வீதம் கப்பல் கட்டணம் அறவிடுவதாக தெரிவித்தார்கள். இதன்போது அரசாங்க அதிபர், இதேபோன்று ஏனைய கப்பல் முகவர்களும் தமது கப்பல் கட்டணத்தை குறைத்து உள்ளூர் உற்பத்தி ஏற்றுமதியை ஊக்குவிக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும் தற்போது தாம் ஒரு அந்தர் வெங்காயத்தை ரூபா 1750 முதல் ரூபா 2000 வரையில் கொள்வனவு செய்யப்படுவதாகவும்,கிலோ ஒன்றுக்கு ரூபா 30 கப்பல் கட்டணமாக செலுத்துவதாகவும் ஏற்றுமதி முகவர்கள் கருத்துத் தெரிவித்தனர். மேலும் தற்போது புகையிலைக்கான கேள்வி தென் பகுதியில் குறைவாகக் காணப்படுவதால் புகையிலை ஏற்றுமதி செய்வது குறைவடைந்துள்ளதாக ஏற்றுமதி முகவர்கள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து புகையிலை உற்பத்தியைக் குறைத்து வெங்காய செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம்,கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. அடுத்து தற்போது யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்தின் விலை குறைவடைந்துள்ளபோதும் தென் பகுதியிலும் அதன் விலை குறைவாக காணப்படுவதால் அதனை தற்போது ஏற்றுமதி செய்வதில்லை என ஏற்றுமதி முகவர்களால் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து வெங்காயத்தை கப்பல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## இரத்ததான முகாம்

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினர் கலந்துகொள்ளும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலையில், யாழ். செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் உதவியுடன் நடைபெறவுள்ளது. எனவே இரத்ததானம் செய்ய விரும்பும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் இவ் இரத்ததான முகாமிற்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர். (அ)

## உள்ளூராட்சித் திணைக்களம் விண்ணப்பித்தால் கப்பலில் தார் எடுத்துவர அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்

### அரச அதிபர் க.கணேஷ் தெரிவிப்பு

யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக் களங்கள் தமக்கு தேவையான தாரை கொள்வனவு செய்து கொழும்பிலிருந்து எடுத்து வர அனுமதி கேட்டால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரூடாக கப்பலில் இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுமென யாழ். அரச அதிபர் க. கணேஸ் தெரிவித்தார்.

யாழ் . வந்துள்ள வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அரச அதிபரின் கப்பல் ஒழுங்குகள் செய்து தந்தால் தமது திணைக்களம் தாரை எடுத்து வர நடவடிக்கை எடுப்பதாக பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தமை தொடர்பாக கேட்ட போதே அவர் இவ்வாறு தெரவித்தார். அத்துடன் தனியாரோ யாழ். வணிகர் கழகமோ தாரை எடுத்துவருவதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும்

ஆனால் தனியார் ஒருவருக்கு தாரை எடுத்து வருவதற்கு உள்ளூராட்சி சபை ஒப்பந்தத்தை வழங்கியிருந்தால் அதனை உறுதிப்படுத்தி உள்ளூராட்சி திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசுக்கு கோரிக்கை விடுத்தால் அதனை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் எனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்தார். (அ-5)


## Calling For Tender -Teaching Hospital, Jaffna

### Renovation of Temporary Emergency Unit

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Renovation of Temporary Emergency Unit, TH, Jaffna up to 10.00 am on 26.03.2008 Tender Form may be collected from Director, TH, Jaffna up to 22.03.2008 on payment on non refundable deposit of Rs. 42,500/-

02. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to present at the opening Tenders.

03. Tender forms are issued only contractors have been valid registration in Grade M7 and above in the field of Building Constructions and other institute of Consrtuctions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04. Sealed Tender may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 26.03.2008.

05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, TH, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C/862)

# கண்ணீர் அஞ்சலி



## உயர்திரு. ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்

### (செயலாளர், காரைநகர் அபிவிருத்திச் சபை)

காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும்,காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், காரைநகர் கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவராகவும், கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய பழைய மாணவ சங்கப் பொருளாளராகவும் பணியாற்றிய உயர்திரு. ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர் 13.03.2008 அன்று கொழும்பில் திடீர் மரணம் அடைந்த செய்தியைக் கேள்வியுற்று மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளோம்.

தற்போதைய சூழ்நிலையில் நாங்கள் புலம்பெயர்ந்து ஏனைய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது எமது காரைநகர் வாழ் உறவுகளுக்கு உதவ எண்ணிய போது எமது எண்ணத்தை நிறைவேற்றத் தாங்கள் அயராது பாடுபட்டீர்கள்.

தீவுப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினைக்கு நாம் உதவ முன்வந்தபோது எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து எமது எண்ணத்தை நிறைவேற்றியது மட்டுமல்லாது காரை உறவுகளின் தாகம் தீர்த்த நிறைவு எமக்காக இருந்தாலும் அந்தப் புண்ணியம் தங்களைச் சாரும். அதன் மூலம் நாமும் நிறைவடைந்தோம்.

குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண பல திட்டங்கள் தயாரித்தீர்கள். அவைகள் நிறைவடைய முன்னர் உங்களை இறைவன் அழைத்தானே!

லண்டன், கனடா, சுவிஸ், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்க வாழ் காரை உறவுகள் கேட்டபோது இன்முகத்துடன் காரை அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து அதனை முன்னெடுத்த தங்களையிழந்து நாம் தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தில்லைக்கூத்தனின்திருவடிகள் பணிந்து தொழுது அன்னாரின் இழப்பால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரித்தானிய காரை நலம்புரிச் சங்கம் (U.K.)

(C-863)

# டீசல் பற்றாக்குறையால் போக்குவரத்துச் சேவை பாதிப்புறும் நிலை-பொது முகாமையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவைகளில் பாதிப்பேற்படாத வகையில் இரு வாரங்களிற்கு தேவையான டீசலை யாழ். அரச அதிபர்,மத்திய போக்குவரத்து சபையுடன் தொடர்புகொண்டு பெற்றுத் தந்துள்ளார் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் என்.கணேஷபிள்ளை தெரிவித்தார்.

நேற்று வரை வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு 60 மில்லியன் ரூபாவுக்கு டீசலை கடனாக வழங்கிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவ்வாறு தொடர்ந்து கடனுக்கு வழங்க முடியாது என அறிவித்துள்ளது.

இதன் காரணமாக இரு தினங்களிற்கு சேவையை வழங்கக் கூடிய டீசலே தம்மிடமுள்ளதாகவும் அத்துடன் கடனைச் செலுத்தவோ அல்லது பணத்தை உடன் செலுத்தி டீசலை கொள்வனவு செய்யவோ வடபிராந்திய போக்குவரத்து சபையிடம் நிதியில்லையென அதன் பொதுமுகாமையாளர் என்.கணேஷபிள்ளை அரச அதிபரிற்கு அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மத்திய போக்குவரத்து சபையுடன் தொடர்புகொண்டு நிதியைப் பெற்று இரு வாரங்களிற்கு தேவையான டீசலை வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். (அ-5)

## மொறட்டுவப் பல்கலைக்கழக அனுமதிக்கான உளச்சார்பு பரீட்சை

மொறட்டுவபல்கலைக்கழகதகவல்தொழில் நுட்ப விஞ்ஞானமாணி (B.Sc.in IT) கட்டடக் கலைமாணி (B.Arch), வடிவமைப்புமாணி (B.Design), ஆகிய பட்டப்படிப்புக்களிற்கு விண்ணப்பித்த மாவணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை,மொறட்டு பல்கலைக்கழக துணைவேந்தரின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ். பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 22,23 ஆம் திகதிகளில் நடைபெற ஒழுங்குகள் செய்திருப்பதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். பரீட்சை தொடர்பாக நேரசூசியை விரைவில் அறியத் தரப்படும். (அ)




## அரச செலவில் அடக்கம் நீதிமன்றம் உத்தரவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இருக்கும் சடலம் எதிர்வரும் திங்கட்கிழமை 17 ஆம் திகதி வரை உரிமை கோரப்படாவிட்டால் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜீ. அலெக்ராஜா உத்தரவிட்டுள்ளார்.

வரணி வடக்கு வரணியைச் சேர்ந்த சிதம்பரம் ஆறுமுகம் (வயது 69) கடந்த 5ஆம் திகதி வைத்தியசாலையில் மரணமடைந்தார். இவரது சடலத்தை எவரும் பொறுப்பேற்கவில்லை.

இது சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். நீதிமன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை சடலம் உரிமை கோரப்படாவிட்டால் அரச செலவில் அடக்கம் செய்ய உத்தரவிட்டிருக்கிறார். (அ)

# இடைநிறுத்தப்பட்ட மா விற்பனை நேற்று முதல் மீண்டும் ஆரம்பம்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் கோதுமை மாவை விற்பனை செய்வதற்கு நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஒன்றிலிருந்து தனியார் வியாபாரிகளுக்கு கோதுமை மா கட்டணங்களை மீறி மொத்தமாக விற்பனை செய்தமையினாலேயே உடனடியாக அதன் விற்பனை நிறுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இருப்புக்கள் எடுக்கப்பட்டு மீண்டும் நேற்றுமுதல் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களை கோதுமை விற்பனைக்கு அனு மதி வழங்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதேவேளை ஏ-9 பாதை மூடப்பட்ட பின் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் யாழ். அரச அதிபர் ஊடாகவே கோதுமை மா பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எனவே அரச அதிபரின் அனுமதியின்றி தனியார் வியாபாரிகளுக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் கோதுமை மாவை விற்பனை செய்ய முடியாமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## ஆலயத் திருப்பணி

(மருதங்கேணி)

பருத்தித்துறை மாலந்தெணி பிள்ளையார் ஆலயத்தின் முழு அளவிலான ஆலய புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வாலயத்தில் 50 வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்பும் நடைபெறவில்லை.

ஆகவே ஆலயத்தின் மூலம் தானம் முதற்கொண்டு முழு கட்டமைப்பும் சிதைவுற்ற நிலையிலுள்ளது.

இவ் ஆலயம் உடன டியாக புனரமைப்பு செய்ய வேண்டிய நிலை யிலுள்ளதால் திருப்பணி வேலைகளை முன் னெடுத்துச் செல்ல இவ்வூர் மக்கள் யாவரும் இத் திருப்பணியில் முன்னெடுத்து அதில் பங் கேற்கும் வகையில் அதற்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஆக்கபூர்வமான கட்டமைப்பு விதிமுறைகளையும் நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்குமாறு ஆலய திருப்பணி சபை வேண்டி நிற்கிறது. (ஓ-35)

# வட இலங்கை சங்கீத சபையின் செய்முறை பரீட்சை ஏப்ரலில்


(யாழ்ப்பாணம்)

வட இலங்கை கர்நாடக சங்கீத சபையின் வருடாந்த செய்முறைப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக சங்கீத சபை தெரிவித்துள்ளது.

இம்முறை 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களுள் தரம் ஒன்று மாணவர்களே அதிகமாகவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள், நேரசூசி ஆகியன தபாலில அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றது.

பரீட்சைகள் கொழும்பு,கண்டி,திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா, முல்லைத்தீவு,கிளிநொச்சி,மன்னார்,பண்டாரவளை , ஹட்டன் ஆகிய எட்டு இடங்களில் உள்ள அரசினர் பாடசாலைகளிலும் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், வட்டுக்கோட்டை, கொக்குவில், கோப்பாய்,பருத்தித்துறை, உடுப்பிட்டி, சாவகச்சேரி, மருதனார்மடம், வேலணை ஆகிய எட்டு இடங்களில் உள்ள அரசினர் பாடசாலைகளிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய குருக்கள் பரம்பரையைச் சார்ந்தவரும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும் திருகோணமலை உயர்நீதிமன்ற பதிவாளருமான துரைசாமி ஐயர் சுரேந்திர ஐயர் திருகோணமலை உயர்நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் முன்னி லையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (அ)

# சமய அறிவுப் பரீட்சை - பரிசளிப்பு

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 55 பரீட்சை நிலையங்களில் நடாத்தப்பட்ட 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் பரீட்சை முடிவுகள் யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சையில் 1, 2, 3ஆம் இடங்களையும் அதி விசேட சித்திகளையும் பெற்றுள்ளவர்களுக்கான தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமாகிய மு.செ.சரவணபவ தலைமையில் இடம்பெறவுள்ளது.

போட்டி முடிவுகள் வருமாறு,

**பாலர் பிரிவு**

முதலாம் இடம்: ப.தாரணிகா- சுழிபுரம் ஐக்கிய சைவ வித்தி., இரண்டாம் இடம்: ம.தனுஜன்-நல்லூர் காசிப்பிள்ளை வித்தி., மூன்றாம் இடம்: ப.மிசாந்-கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி., மூன்றாம் இடம்: ந.கஜேந்திரன்-புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

அதிவிசேட சித்தி-67பேர், விசேட சித்தி-530 பேர்

**கீழ்பிரிவு**

முதலாம் இடம்: இ.கம்ஷாயினி-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாம் இடம்- கா.திருக்குமரன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம்: தி.மிதுனா-வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி.

அதிவிசேட சித்தி -30பேர், விசேட சித்தி-83பேர்.

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்- இ.இராஜபிரவிந்தன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்: சா.மதுரமி-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம்- இ.சாம்பவி- இராமநாதன் கல்லூரி.

அதிவிசேட சித்தி-32பேர், விசேடசித்தி-60பேர்.

**மேல் பிரிவு**

முதலாம் இடம்: இ.சோபனா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்:ர. துவாரகன்-காட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம்:இ. அபிராமி-விக்ரோறியாக் கல்லூரி, நான்காம் இடம்:கு.கஜேந்திரன்- காட்லிக் கல்லூரி

அதிவிசேட சித்தி -35பேர், விசேடசித்தி-46பேர்.

**அதிமேல் பிரிவு**

முதலாம் இடம்: ப.பார்த்தீபன்-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, இரண்டாம் இடம்: சி.ஜெயாளினி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம்:வீ. இமாஜினி- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

அதிவிசேட சித்தி-18பேர், விசேட சித்தி-41பேர். (ஓ)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மூளாய் , காளிகோவிடி , சுரேஸ் கல்வி வளர் சோலையின் 27 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் கல்வி நிலைய முன்றலில், இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்வி நிலைய இயக்குநர் கே.எஸ். சின்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவின் பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.எம். குமாரசாமியும், கௌரவ விருந்தினராக கவிஞர் எஸ்.சிவசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே. சந்திரசேகரன், ஹெலன் விஸ்வநாதன் (ச.நீ) ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் மாணவ, மாணவிகளின் சிறப்பு நிகழ்ச்சிகளாக மாணவர்களின் கல்விக்கு பெரிதும் பங்களிப்பது பெற்றோர்களா? ஆசிரியர்களா? எனும் தலைப்பிலான பட்டிமன்றமும், பொலித்தீன் அரக்கன் எனும் சிந்து நடைக்கூத்தும் இடம்பெறவுள்ளன. (ஓ)

## வலய மட்டப் போட்டிக்கு ஏழு அணியினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஏழு பெருவிளையாட்டு அணிகள் வலய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளன.

ஆண்களுக்கான மூன்று கரப்பந்தாட்ட அணிகளும், பெண்களுக்கான இரண்டு வலைப்பந்தாட்ட அணிகளுமே இவ்வாறு தெரிவாகியுள்ளன.

இதில் ஆண்களுக்கான 17, 19 வயது கரப்பந்தாட்ட அணிகள் முதலாமிடத்தையும் 15 வயது கரப்பந்தாட்ட அணி இரண்டாமிடத்தையும் பெண்களுக்கான 15 வயது கரப்பந்தாட்ட அணி முதலாமிடத்தையும் 19 வயது அணி மூன்றாம் இடத்தையும் 15, 19 வயது வலைப்பந்தாட்ட அணிகள் முதலாமிடங்களையும் கோட்டமட்டத்தில் பெற்றுக்கொண்டுள்ளதாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வி.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ)





ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் பான்ட் வாத்தியக் குழுவினரால் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.கே. கண்ணதாசன் மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடாத்தும் க.பொ.த. உயர்தர (2007) '3A' சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் விழா - சிறப்புமலர் 15.03.2008

## அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி



யாழ்.மாவட்டத்தில் எந்த நிலைவரம் நிலவிய பொழுதிலும் எம் மாணவச் செல்வங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டிய கடப்பாடு எம்முன் உள்ளதெனலாம். இப்பாரிய பணியில் கல்விச் சமூகத்திற்குக் கைகொடுத்து உதவும் வகையில் இலங்கை வங்கி க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களிலும் விசேட சித்தி (A) பெற்றவர்களைக் கௌரவிக்கவும், தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் முனையும் இன்றைய நிகழ்வு வரவேற்பிற்குரியது.

இடர்மிகுந்த சூழலிலும் தளரா முயற்சியுடன் கல்வி கற்று திறப்படச் சித்தியடைந்த இம்மாணவர்கள், இவர்களை ஈன்றெடுத்த பெற்றோர், வளர்த்து ஆளாக்கிய ஆசிரியப் பெருந்தகைகள், பாடசாலை அதிபர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், ஏனைய நிறுவனங்கள் ஆகிய அனைவருமே பாராட்டிற்குரியவர்கள், கௌரவிக்கத்தக்கவர்கள்.

எளிமையான வாழ்வும், வலிமையான சிந்தனையும் மேலோங்க இன்றைய இவ்விழா அடித்தளமிடும் எனலாம். மாணவர்கள் ஒவ்வொருவரும் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதை உணர்ந்து கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும்.

இத்தகைய கௌரவம் பெறவேண்டும் என்ற உளத்தூண்டுதலால் அடுத்து வரும் ஆண்டில் திறம்படச் சித்தி பெறும் மாணவர் எண்ணிக்கை கணிசமாக உயரவேண்டும்.

கல்வியால் பெறும் அழகை, ஆளுமையை, ஆற்றலை சமூக நன்மைக்காக அர்ப்பணிப்புடன் ஒன்றிணைந்து பாடுபட வேண்டிய காலம் இதுவாகும். இதனை உணர்ந்து செயல்வடிவம் கொடுத்துதவும் இலங்கை வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

வளர்ச்சிக்கு எல்லையே இல்லை. கல்வித்துறையிலும் வளர்ச்சி முற்றுப் பெறுவதேயில்லை. புதியன படைக்கும் ஆர்வத்தோடு பழமையைப் பேணி எமது சமூகப் பண்பாட்டை சர்வதேச தரத்திற்கு உயர்த்த கல்விச் சமூகம் தன்னாலியன்ற பங்களிப்பை நல்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**க.கணேஷ்**
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

## முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



மாணவ கௌரவிப்பு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். 3A பெற்ற மாணவர்கள் எமது சமூகத்தின் மிகச் சிறந்த பிரிவினர்.

எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரங் களாவும், வள வாளர்களாவும், வாழ்வு தருபவர்களாக இருப்பர். அறிவை முன்னெடுத்து ஆராய்ச்சிகள் மூலம் புதிய கண்டுபிடிப் புக்களைச் செய்யக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள் இவர்கள்.

மத்தியில் இருக்கும் வாய்ப்புகள் அதிகம். சமூகத்தில் ஒரு சிலரே விஞ்ஞான/சமூக விஞ்ஞான கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளனர்.

இவர்கள் மூலமே சமூக பல்துறைகளில் நன்மைகள் பெற்றன. இதனால் நாடும், சமூகமும் இம் மாணவர் தொகுதியில் உள்ளார்ந்த ஆற்றலை மேம்படுத்தி, இவர்களின் சக்தியை தேசத்தின் வளர்ச் சிக்கு நன்கு பயன்படுத்த வேண்டும்.

இம்மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியில் முன்னர் போல் கூடிய ஈடுபாடு கொண்டு கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த முறையில் கல்விகற்றுத் தங்களை ஆளாக்கிய குடும்பம், சமூகம், தேசத்தை முன்னேற்ற பாடு பட வேண்டும்.

இன்றைய அறிவுசார் பொருளாதாரக் கூட்டமைப்பில் நாட்டை முன்னேற்ற மிகச்சிறந்த மனிதவளம் தேவைப் படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் உள் ளூர் பத்திரிகைகள், வங்கிகள் காட்டும் கரிசனை, மேற் கொள்ளும் நடவடிக்கைகள் நன்றாகவுள்ளன.

இந் நிகழ்வை இணைந்து நடாத்தும் இலங்கை வங்கியும், வலம் புரியும் மிகவும் பாராட்டுக்குரியன.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## சமூக இடைத்தாக்கத்தின் மெய்ப்பாடு



க.பொ.த. (உயர்தர) வகுப்பில் உயர் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்க இலங்கை வங்கியும், வலம்புரியும்மேற்கொள்ளும்நடவடிக்கைகளுக்கு கல்விச் சமூகம் சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்தில் மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களை ஊக்குவிப்பதனால் வருங்காலத்தில் அதிகளவு மாணவர்கள் உயர்சித்தி பெற முயற்சிப் பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இலங்கை வங்கி தனது கட மைக் கூறுகளில் கல்வியை மேம்படுத்துவதில் எடுக்கும் முயற் சிகள் பாராட்டிற்குரியது. இலங்கை வங்கி இச்சமூகத்தில் தன்னை யும் ஒரு அங்கத் தவராகக் கொண்டு இச்சமூகத்தின் மற்றொரு அங்கத்தவரான மாணவர்களைக் கௌரவிக்கின்றது. இங்கு சமூகக் கூறுகளுக் கிடையேயான இடைத்தாக்கத்தினால் கல்வி மேம்பட சமூகமும் மேம்படும் என்றதத்துவம் மெய்ப்பிக்கப்படு கின்றது. மேலும் இம்முயற்சி தொடர எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரத்தினம்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், யாழ்.மாவட்டம்.

## மனதார வாழ்த்துகின்றேன்




2007 இல் க.பொ.த. (உயர்) தரத்தில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்விற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணத்தில் நிலவும் பல்வேறு கஷ்டங்கள் மத்தியிலும் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெறுவதென்பது சாதாரணமான விடயமல்ல. எனவே கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்து அதிவிசேட சித்திகளைப் பெற்று எமக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களை வாழ்த்துவது -அவர்களைக் கௌரவிப்பது அனைத்தும் காலம் உணர்ந்த பணியாகும்.

இந்த பணியை இலங்கை வங்கியும், வலம்புரி நாளிதழும் இணைந்து நடாத்துவது பெருமைக்குரியதாகும். இந்நிகழ்வில் கௌரவம் பெறும் மாணவச் செல்வங்களையும் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ள ஏனைய மாணவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தி அவர்கள் எல்லா நலனும் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. வெற்றிவேலாயுதம்
நிர்வாக இயக்குநர்,
வலம்புரி நாளிதழ்.

## உதவிப் பொதுமுகாமையாளரின் வாழ்த்துச் செய்தி



இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு நடை பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று 'ஏ' பெற்று தமது கல்விச் சாலைக்கும், பெற்றோருக்கும், சமூகத்திற்கும் மட்டற்ற பெருமையைத் தேடித்தந்த யாழ். பிரதேச மாணவர்கள் 80 பேரைக் கௌரவிக்கும் இப்பெருவிழாவிற்கு பிரதான அனுசரணையாளராக இலங்கை வங்கி அமைவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

நாட்டின் தற்காலச் சூழல் காரணமாக கல்வி கற்றல் தொழிற்பாட்டுக்கு பற்பல இடையூறுகள், தடைகள், வளப்பற்றாக்குறைகள் ஏற்பட்ட போதிலும் இம் மாணவர்களின் விடாமுயற்சியும், கடின உழைப்புமே இவர்களது இத்தகைய வெற்றிக்கும் காரணமாக அமைந்தன என்றால் அது மிகையாகாது.


இத்தகைய கடின உழைப்பையும் விடா முயற்சியையும் தொடரும் உயர்கல்வித்துறையிலும் இவர்கள் காட்டி மிக உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று நம் சமூகத்திற்கும் நாட்டிற்கும் அளப்பரிய சேவைகளைச் செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இம்மாணவர்களை வாழ்த்தி நிற்கிறேன்.

**B.A. அருமைநாயகம்**
உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி, வடபிராந்தியம்.


## மாவட்டநிலையில் முதலிடம் பெற்ற மாணவர்கள்



எஸ்.நிமலன்
உயிரியல்
தேசிய நி.1
**ஹாட்லிக் கல்லூரி**



வீ.ரஜீபன்
கணிதம்
தே.நி.3
**ஹாட்லிக் கல்லூரி**



இ.அனுசாங்கன்
வர்த்தகம்
**சென்ஜோண்ஸ் கல்லூரி**



க.கீர்த்தனா
கலை
**யூனியன் கல்லூரி**

---

இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடாத்தும்
க.பொ.த உயர்தர (2007) '3A' சித்தி பெற்ற மாணவர்களுக்கான

### கௌரவிப்பு அழைப்பிதழ்


**இடம்:-** யாழ்.செயலக மாநாட்டு மண்டபம்
**காலம்:-** 15.03.2008 சனிக்கிழமை காலை 08.30மணி
**வரவேற்புரை:-** திரு.ந.சிவரத்தினம்
(செயற்பாட்டு முகாமையாளர்)
**ஆசியுரை:-** திரு.கே.கணேஷ்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
**தலைமை உரை:** திரு.பொ. அ.அருமைநாயகம்
(உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி வடபிராந்தியம்)
**சிறப்புரை:-** வாழ்நாள் பேராசிரியர்
பொன்.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
**கருத்துரைகள்:** திரு.வி.ரி.செல்வரத்தினம்
(யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்
யாழ்.கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)
திரு.என்.விஜயசுந்தரம் (வலம்புரி)
**பிரதம உரை:-** திரு.ஆர்.ஏ.திலகரட்ணம்
(அதிபர், உயர் தொழில் நுட்ப நிறுவனம் திருநெல்வேலி)
திரு.கே.பாலசுப்பிரமணியம்
(முன்னாள் உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி யாழ்ப்பாணம்)
**விரிவுரை நிகழ்ச்சி:-** 10.00 மு.ப 'Career Development'
திரு.எம்.சின்னத்தம்பி
(சிரேஷ்ட விரிவுரையாளர்யாழ்.பல்கலைக்கழகம்)
'Internet & Email'
திரு.எஸ்.ஹரிஹரகணபதி
(விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம்)
சான்றிதழ் மற்றும்
அடையாளப் பரிசு வழங்கல்
**நன்றியுரை:-**
திரு.கே.எல்.லட்சுமணசர்மா
(முகாமையாளர், இலங்கை வங்கித திருநெல்வேலி கிளை

**மதியபோசன விருந்து**

*3A சித்தி பெற்ற மாணவர்களையும் மாணவர்கள் சார் பாடசாலை அதிபர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்*

# அன்டர்சனின் துல்லியமான வேகத்தில் நியூசிலாந்து 198 ஓட்டங்களுக்குள் சுருண்டது

அன்டர்சனின் துல்லியமான வேகத்தில் நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையுமிழந்தது. நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து



அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இத் தொடரில் முதலாவது போட்டியில் வெற்றிபெற்று நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் முதல் வெலிங்டனில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணியை அழைத்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் முதலாவது நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெற்றுக்களையிழந்து 291 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அம்புருஸ் தனது கன்னிச் சதத்தை கடந்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த பிரோட்டும் அரைச்சதம் கடந்த கொலிங்வூட்டும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இறுதியில் இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் 342 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெற்றுக்களையுமிழந்தது.

இதில் அம்புருஸ் 102 ஓட்டங்களையும், கொலிங்வூட் 62 ஓட்டங்களையும் மற்றும் குக் 44, வோகன் 32, பீற்றர்ஸன் 31 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் கில்லஸ்பி 4 விக்கெற்றுக்களையும் ஜேக்கப் ஓரம் 3 விக்கெற்றுக்களையும் மில்ஸ் 2 விக்கெற்றுக்களையும் மற்றும் மார்டீன் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அன்டர்சனின் சிறப்பான பந்துவீச்சால் 198 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் அணித்தலைவர்



டானியல் விக்டோரி 50 ஓட்டங்களையும், ஜேக்கப் ஓரம் 53 ஓட்டங்களையும் மற்றும் பிளமிங் 34, மக்குலம் 25 ஓட்டங்களையுமெடுத்தனர். ஏனைய வீரர்கள் இரட்டை இலக்கைகூட கடக்கவில்லை.

பந்துவீச்சில் அன்டர்சன் 5 விக்கெற்றுக்களையும் கொலிங்வூட் 3 விக்கெற்றுக்களையும் மற்றும் சயிட்பொத்தம், பிரோட் ஆகியோர் தீலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 142 ஓட்டங்கள் முன்னிலையிலுள்ள இங்கிலாந்து அணி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெற் இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

3ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)

## மேற்கிந்திய தீவுகள் அணிக்கு சர்வான் மீண்டும் இணைப்பு

(பார்படோஸ்)

இலங்கையுடனான டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்திய அணியில் ராம்நரேஷ் சர்வான் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். எனினும் மேற்கிந்திய அணித்தலைவராக தொடர்ந்தும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கெயில் செயற்படவுள்ளார்.

மஹேல ஜயவர்தன தலைமையிலான இலங்கை அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதன் முதல் டெஸ்ட் கயானாவிலும் (மார்ச் 22-26), இரண்டாவது டெஸ்ட் டிரினிடாட்டிலும் (ஏப்ரல் 03-07) நடைபெறவுள்ளன.

இந்நிலையில் டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்திய அணியில் தலைவராக பிரையன் லாராவுக்கு பின், நியமிக்கப்பட்ட ராம்நரேஷ் சர்வான் அணிக்கு இணைக்கப்பட்டுள்ளார். எனினும் அணியின் தலைமை பொறுப்பு கிறிஸ் கெயிலிடம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக காயத்தினால் அவதிப்பட்டு வந்த சர்வான் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்துக்கான மேற்கிந்திய அணியில் இடம் பிடிக்கவில்லை. இதன் காரணமாக கெயிலின் தலைமையில் தென்னாபிரிக்கா சென்ற மேற்கிந்திய அணி அங்கு நடைபெற்ற முதல் டெஸ்டில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

**மேற்கிந்திய டெஸ்ட் அணி**

கிறிஸ்கெயில் (தலைவர்), ட்வாயன் பிராவோ, சுலிமன் பென், சிவனாரின் சித்தகோன், ஷிவனாரின் சந்தர்போல், பெட்ரோ கொலின்ஸ், பிடல் எட்வட்ஸ், ரியான் ஹின்ட்ஸ், அமிட் ஜகர்னாத், டரன்பவல், டினேஷ் ராம்டீன் (வி.கா.), மாலன் சாமுவேல்ஸ், ராம்நரேஷ் சர்வான், டெவோன் ஸ்மித், ஜரமி டைலர். (5)

## ஐ.சி.சி தர வரிசையில் நம்பர்–1

## பங்களாதேஷுடனான ஒரு நாள் தொடரை முழுமையாக சுவீகரித்தது தென்னாபிரிக்கா

பங்களாதேஷுடனான 3–வது ஒரு நாள் போட்டியிலும் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணி தொடரை 3:0 என்ற கணக்கில் சுவீகரித்தது. பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வந்தது.

இதில் டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடரின் 3–வது ஒருநாள் போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 42.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. இதில் நபீஸ் 25, நஸீமுடின், பார்காட் ரிசா ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 20 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மோர்கல் 4 விக்கெட்டுக்களையும் போர்த்தா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 144 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, அணித்தலைவர் சிமித் மற்றும் டி வில்லியஸ் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தினால் 34.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 147 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதில் அணித்தலைவர் சிமித் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களை எடுத்தார். டி வில்லியஸ் 40 ஓட்டங்களையும் பீற்றர்சன் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் அப்துல் ரஸாக், ஹுசைன் ரிசா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**நம்பர் 1 அணி**

இவ் வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட தொடரை 3:0 என்ற கணக்கில் முழுமையாக வென்று ஐ.சி.சி தர வரிசையில் உலகச் சம்பியன் அவுஸ்திரேலியாவை 2ஆம் இடத்திற்குத் தள்ளி தென்னாபிரிக்க அணி முதலிடத்தை தனதாக்கியது. (5)

## ஆடு பலி கொடுத்த தோனிக்கு சிக்கல் அணியில் இருந்து நீக்க கோரிக்கை

(சிர்சா)

இந்திய அணித்தலைவர் தோனிக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆடு பலி கொடுத்தது தொடர்பாக இவரை அணியில் இருந்து நீக்க வேண்டும் என மிருகவதை எதிர்ப்பு அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இந்திய அணியின் ஒரு நாள் போட்டிக்கான தலைவராக அசத்திவருகிறார் தோனி. 'இருபது–20' உலக கோப்பையை வென்று காட்டிய இவர் அவுஸ்திரேலிய மண் ணிலும் கலக்கி னார். முத்தரப்பு இறுதிப் போட்டிக்கு இந்திய அணி, அவுஸ்திரேலியாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வெல்ல முக்கிய காரணமாக இருந் தார்.

**கடவுளுக்கு நன்றி**

இதற்கு பின் சொந்த ஊரான ராஞ்சிக்கு திரும்பிய தோனி, அவுஸ்திரேலிய மண்ணில் கிடைத்த வெற்றிக்காக கடவுளுக்கு நன்றி சொன்னார். நேத்திக் கடன்களையும் முறைப்படி செலுத்தினார். முர்ரியில் உள்ள சிவன் கோயிலுக்கு சென்ற இவர் கையில் புனித நீருடன் அரைகிலோமீற்றர் தூரம் நடந்து போய் வழிபட்டார். இங்குள்ள ராமர், சீதா, அனுமார் கோயிலில் சிறப்பு பூஜைகள் செய்தார். பின்னர் துர்க்கை அம்மன், மாதா தியோரி கோயிலுக்கு சென்று தனது ஆன்மீக கடமையை நிறைவேற்றினார்.

**சர்ச்சைவழிபாடு:–** இப்படி பல்வேறு கோயில்களுக்கு சென்ற தோனி, ஆடு ஒன்றை பலி கொடுத்ததாக கூறப்படுகிறது. இவர் பிறந்த ஜார்க்கண்ட் மாநிலத்தில் பழங்குடி இன மக்கள் அதிகம். இவர்கள் வெற்றியை வேண்டி ஆடு, கோழிகளை பலி கொடுப்பது சகஜம். முத்தரப்பு தொடரின் இறுதிப்போட்டியில் இந்திய அணி வெற்றிபெற வேண்டும் என்பதற்காக சில ஆதிவாசிகள் கோழியை பலி கொடுத் தனர்.

இதேபோலத்தான் தோனியும் தற்போது ஆடு பலி கொடுத்துள்ளதாக தெரிகிறது. இதற்கு அகில பாரதிய ஜீவ ரக்ஷா பிஷனோய் சபா (ஏ.பி.ஜே.ஆர்.பி.எஸ்.) என்ற மிருகவதை எதிர்ப்பு அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அநியாயமாக ஒரு மிருகத்தை கொன்றதற்காக இந்திய அணியில் இருந்து தோனியை நீக்க வேண்டும் என பி.சி.சி.ஐ. தலைவர் சரத் பவாரை கேட்டுக்கொண்டுள்ளனர்.

**சல்மான் கான் சம்பவம்:** இது தொடர்பாக பிஷ்னோய் சபாவை சேர்ந்த ராஜ்குமார் பெனிவல் கூறியது, கடவுளுக்கு நேர்த்திக்கடன் என்ற பெயரில் ஆடு ஒன்றை பலி கொடுத்து பாவம் செய்துள்ளார் தோனி. இவரை உடனடியாக இந்திய அணியில் இருந்து நீக்க வேண்டும். தவறினால் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்படும். நாட்டில் உள்ள மரங்கள், விலங்குகளை காப்பதற்காக பிஷ்னோய் அமைப்பு பாடுபட்டு வருகிறது. எங்களது அமைப்பினர் எழுப்பிய புகாரின் அடிப்படையில் தான், அன்று மான்வேட்டையாடிய வழக்கில் பாலி வுட் நடிகர் சல்மான் கான் சிறைக்கு செல்ல நேர்ந்தது. இவ்வாறு ராஜ்குமார் கூறினார்.

**பிகொம் படிக்கலாமா?** தோனிக்கு பிகொம் படிக்க ஆசை வந்துள்ளது. 'ஸ்போர்ட்ஸ் கோட்டாவில்' இடம் அளிக்கும்படி ராஞ்சி பல்கலை, விளையாட்டு இயக்குநர் ஜெய்குமாரை சந்தித்து பேசியுள்ளார். இது குறித்து புனித சேவியர் கல்லூரியின் முதல்வர் நிக்கோலஸ் கூறுகையில், தோனி பிகொம் படிக்க முயற்சிப்பது உண்மை தான். 'அட் மிஷன்' தருவதற்கு 'ரெடியாக' உள் ளோம்.

ஆனாலும் கிரிக்கெற்றில் 'பிஸியாக' இருப்பதால் இவரால் கல்லூரிக்கு வந்து படிப்பது சிரமம். எனவே தோனிக்கு ராஞ்சி பல்கலை, சிறப்பு அனுமதி தரவேண்டும் என்றார்.

## சதம் விளாசிய துடுப்புக்களை சேகரிக்கும் டெண்டுல்கர்

(புதுடில்லி)

சர்வதேச போட்டிகளில் தான் சதம் அடித்த போது பயன்படுத்திய அனைத்து துடுப்புக்களையும் (81) பத்திரமாக பாதுகாத்து வருவதாக சச்சின் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த முத்தரப்பு தொடரில் அசத்தலாக விளையாடிய இந்திய அணி, முதன் முறையாக அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண் ணில் வீழ்த்தி கோப்பை வென் றது. முதல் இறுதிப்போட்டியில் அபாரமாக விளையாடிய சச்சின் சதம் கடந்து சர்ச்சை களுக்கு சரியான பதிலடி கொடுத்தார். இவர் இதுவரை டெஸ்டில் 39, ஒருநாள் போட்டியில் 42 என மொத்தம் 81சதங்கள் கடந்துள்ளார். இவர் தான் சதம் கடக்கபயன்படுத்திய அனைத்து துடுப்புக்களையும் பத்திரமாக சேகரித்து வைத்துள்ளார்.

இது குறித்து சச்சின் அளித்த பேட்டி, என்னிடம் எத்தனை துடுப்புக்கள் இருக்கிறது என தெரியாது. ஆனால் சதம் கடந்த அனைத்து துடுப்புகளையும் பத்திரமாக சேகரித்து வைத்துள்ளேன். சிட்னியில் நடந்த முத் தரப்பு தொடரில் முதல் இறுதிப் போட்டிகள் ஜோன்சன் பந்தில் விக்கெற் காப்பாளரின் தலைக்கு மேலாக நான்கு ஓட்டங்கள் விளாசியதை மறக்க முடியாது. போர்த் டெஸ்டில் பிரட்லீ பந்தில் 'ஸ்டிரைட் டிரைவ்' செய்தது எனக்கு மிகவும் பிடித்த ஷொட்.



கடந்த 18 ஆண்டுகளாக சர்வதேச போட்டிகளில் விளையாடி வருகிறேன். ஆண்டுகள் அதிகரிக்க கிரிக்கெற் மீதான காதல் அதிகரித்துள்ளது. சிட்னி டெஸ்டில் டிராவிட்டுடன் ஜோடி சேர்ந்தது அடுத்து வரும் போட்டிகளுக்கு திருப்பி முனையாக அமைந்தது. இதற்கு பின்னர் நடந்த பேர்த் டெஸ்ட் மற்றும் முத்தரப்பு தொடர் என அனைத்திலும் அவுஸ்திரேலியாவை வீழ்த்த முடிந்தது இவ்வாறு சச்சின் தெரிவித்தார். (5)

> போக்கிரியைக் கட்டுவதற்கு வடம் வேண்டும்;
> ஆனால் நாணயஸ்தனைக் கட்ட நூல் போதும்!
> -ஸ்கட்லாந்து

**வலம்புரி**

## ஜே.வி.பியை அடக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டா?

இலங்கை அரசின் முடிவுகளையும், தீர்மானங்களையும் நிர்ணயிக்கும் வல்லமை ஜே.வி.பிக்கு இருப்பதை மறுப்பதற்கில்லை.

ஜே.வி.பி கோஷம் போட்டால் அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது அரசும் அடங்கிப் போவதைப் பல சந்தர்ப்பங்களில் காண முடிந்துள்ளது.

இவ்விதம் ஜே.வி.பிக்குப் பயந்து போயுள்ள அரசினால் எதனையும் சாதித்துவிட முடியுமென எவரும் கருத முடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசினால் கூட்டப்பட்ட சர்வ கட்சிக் குழுவானது 13–வது திருத்த சட்ட மூலத்தை தீர்வுத் திட்டமாக முன்வைத்துள்ளது.

13–வது திருத்தச் சட்டமூலம் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வா? அதனால் தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமா? என்பன ஆய்வுக்குரிய விடயமாக இருந்தாலும், 13–வது திருத்த சட்டமூலத்தையாவது அரசினால் அமுல் படுத்திவிட முடியுமா? என்பது கேள்விக்குரியதே.

13–வது திருத்த சட்ட மூலத்தினூடாக வடக்கிற்கு அதிகாரமளிக்கப்பட்டால் மக்களைத் திரட்டி போராடுவோம் என ஜே.வி.பி பகிரங்கமாக அறிவித்துள்ளது.

ஜே.வி.பியின் இந்த அறிவித்தல் துணிச்சலுடன் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை எதிர் கொள்ள வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இந்திய அரசுக்குமே உண்டு. ஏனெனில் கடந்த வரவு செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பில், ஜே.வி.பி எதிர்த்து வாக்களிக்குமாயின் நாடாளுமன்றத்தை கலைத்துவிட வேண்டிவருமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த எச்சரிக்கைக்குப் பயந்தே ஜே.வி.பி வரவு செலவுத்திட்டத்தின் மீதான இரண்டாவது வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் விலகிக் கொண்டதெனவும், அதனால் அரசு தப்பிப் பிழைத்தெனவும் கூறப்படுவதுண்டு.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மகிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடந்து கொள்கிறார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்தது முதல் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவை வெளியேற்றியது வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் ஜே.வி.பியின் திட்டமும் செயற்பாடுமாகும்.

எனவே, வரவு செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பில் ஜே.வி.பி விலகி நின்று அரசைத் தப்பிப் பிழைக்க வைத்தது. தனது எம்.பிப் பதவிகளை இழக்க வேண்டி வரும் என்பதற்காக என்ற குற்றச்சாட்டுக்கு அப்பால், ஜே.வி.பி கேட்டுக் கொண்ட கோரிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முன்வந்தமையினாலேயே ஜே.வி.பி அவ்வாறு நடந்து கொண்டதென்பதே உண்மையான காரணமாகும்.

இந்தக் காரணம் தவறானது என யாரேனும் வாதிடுவர்களாயின் ஜே.வி.பியின் எச்சரிக்கைகளுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைக்கலாமல்லவா?

# அரசுடன் இணைந்துள்ள ஈ.பி.டி.பியே கிழக்கில் போட்டியிட முடியாதநிலை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உத்தியோகபூர்வமாக பிள்ளையான் குழுவினரிடம் கையளித்திருப்பதாக ஐக்கியதேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

முன்னாள் வரதராஜப்பெருமாள் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தியதைப் போல பிள்ளையான் குழுவினர் கிழக்கு மாகாணத்தைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்திவிடுவார்கள் என இன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர்திஸ்ஸஅத்தநாயக்க கூறினார்.

இலங்கையைப் பிரிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லையெனக் கூறிவரும் அரசாங்கம்,கிழக்குமாகாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டு அதனைப் பிள்ளையான் குழுவினரிடம் வழங்கி கிழக்கைப் பிரிப்பதற்கே முயற்சிப்பதாக அவர் குற்றஞ் சாட்டினார்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கருணா குழுவினரின் ஆயுதங்களைக் களைவதாக சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசாங்கம் உறுதிவழங்கியிருந்தது. எனினும் சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழியை மறந்துவிட்டு, அந்த ஆயுதக்குழுவுடன் இணைந்து கிழக்கு மாகாணத் தேர்தல்களில் அரசாங்கம் போட்டியிட்டிருப்பதாக திஸ்ஸ அத்த நாயக்க கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறேமக்கள்கோரிக்கைவிடுத்தனர்.எனினும்,ஆயுதக்குழுவுடன்இணைந்ததன் மூலம் அரசாங்கம் ஜனநாயக விரோதச்செயற்பாட்டையே முன்னெடுத்துள்ளது என ஊடகவிய லாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டிய ஐ.தே. க.பொதுச்செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க கிழக்குமாகாணத்தை தமது அர சாங்கம் கைப்பற்றிய போது உடனடியாக அங்கு தேர்தல்களை நடத்தவில்லை யெனவும் ஜனநாயக நடைமுறைகளை ஏற்படுத்தி ஒரு வருடங்களின் பின்னரே தேர்தல்களை நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடைபெற்று முடிந்த தேர்தல்களில் ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருக்கும் ஆயுதக்குழு போட்டியிட்டதால் ஐக்கிய தேசியக்கட்யோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் எல்லாக் கட்சிகளும் போட்டியிடக்கூடிய சூழ்நிலை இருந்தது. மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்த போதும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையென ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் குற்றஞ்சாட்டினார்.

**ஈ.பி.டி.பி.யேபோட்டியிட முடியாத நிலையில் ஐ.தே.க. எவ்வாறு போட்டியிட முடியும்**

அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி.கட்சியே கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமாகத் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலையில் ஏனைய கட்சிகள் எவ்வாறு சுதந்திரமாக போட்டியிட முடியுமென இன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க கேள்வியெழுப்பினார்.

ஐக்கியதேசியக் கட்சிக்கு கிழக்கு மாகாணத்தில் மக்கள் ஆதரவு இல்லை. இதனால்தான் அக்கட்சி போட்டியிடவில்லையென ஜனாதிபதி கூறியிருந்தமையைச் சுட்டிக்காட்டிய எஸ்.பி.திஸ்ஸநாயக்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைவிட ரணில் விக்ரமசிங்க கிழக்கு மாகாணத்தில் கூடுதலான வாக்கு களைப் பெற்றிருந்ததாகக் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சிதயாராக இருந்தபோதும் ஆயுதக் குழுவினரால் ஏற்பட்ட அச்சுறுத் தல்கள் காரணமாகவே கிழக்குத் தேர்தல்களில் கலந்து கொள்ளாதிருக்கத்தீர்மானித்ததாக எஸ்.பி.திஸ்ஸநாயக்ககுறிப்பிட்டார். (அ-5)

# ஊடகவியலாளர்கள் கைது தொடர்பில் அரசு விளக்கம் அளிக்க வேண்டும்

## எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஐந்து ஊடகவியலாளர்கள் தவறான தகவல்களின் அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து அரசாங்க அதிகாரிகள் விளக்கமளிக்க வேண்டுமென எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் இரு தமிழ் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட ஐந்து ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கடந்த 6ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

'தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து பணத்தைப் பெற்றார்கள் எனக் கூறியே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இந்த ஊடகவியலாளர்களைக் கைதுசெய்துள்ளனர். எனினும் ஜேர்மனியிலுள்ள நிதியம் மற்றும் புலம்பெயர் தமிழர்களுமே அவர்களுக்கு நிதி வழங்கியிருந்தனர் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்' எனத் தெரிவித்திருக்கும் அந்த அமைப்பு 'ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்ட முதல் சில தினங்களில் கடுமையாகத் தாக்கப்பட்டமையைக் கண்டிப்பதுடன், அவர்கள் மீதான குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்கே இவ்வாறான தாக்குதல் கள் நடத்தப்பட்டுள் ளன' எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஊடகவியலாளர்களான வீ.ஜசிகரன், ஜே.எஸ்.திஸநாயகம் ஆகிய இருவரும் தாம் பெற்றுக்கொண்ட நிதியினை Outreach இணையத்தளத்திற்கும், தமிழ் மாணவர்களுக்கு உதவுவதற்கும் பயன்படுத்தியிருந்தனர் என எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. அவுட்ரீஜ் இணையத்தளத்தின் ஆசிரியர் திஸநாயகம் முதற்கட்டமாக கடந்த நவம்பர் மாதம் 12ஆயிரம் யூரோக்களைப் பெற்றுக்கொண்டதாக ஜேர்மன் நிதியமான FLICT தம்மிடம் கூறியிருப்பதாக அந்த ஊடக அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கிழக்குப் பகுதியிலிருக்கும் மாணவர்களுக்கு உதவுவதற்காக ஜேர்மனியில் வசிக்கும் பல்வேறு புலம்பெயர் தமிழர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக்கொண்டதாக எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்புக்குத் தெரிய வந்திருப்பதாகக் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி ஈ.குவாலிற்றி அச்சக உரிமையாளரும், எழுத்தாளருமான ஜசிகரனும், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டதுடன், அவரது கணனியையும் அச்சகத்தில் அச்சிடப்பட்ட நூல்களையும் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் எடுத்துச்சென்றிருந்தனர். அத்துடன், சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பத்தி எழுத்தாளரும் Outreach இணையத் தளத் தின் ஆசிரியருமான திஸநாயகம், இணையத்தளத்தின் செய்தியாளர் கீத்சிறி விஜேசிங்க, படப்பிடிப்பாளர் கயான் லசந்த ரங்கா மற்றும் வீடியோ தொகுப்பாளர் உதயனன் ஆகியோரும் கடந்த 7ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்த சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் எஸ்.சிவக்குமார் சில மணி நேர விசாரணைகளின் பின்னர் மார்ச் 8ஆம் திகதி விடுவிக்கப்பட்டார் எனவும் எல்லை களற்ற பத்திரிகையாளர் அமைப்பு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ-5)

# அன்பெனும் ஆணிகளை இதயத்தில் அறைந்திடுவோம்

யேசுவை சிலுவையில் வைத்து மூன்று ஆணிகளால் அறைந்து கல்வாரி மலையின் உச்சியில் உயர்த்தினார்கள். பல நாடுகளுக்கு பல்லாயிரம் மைல்கள் நடந்து நற்செய்தி முழக்கமிட உதவிய கால்கள் ஆணியால்துளைக் கப்பட்டன.

## தவக்காலப் பொழிவு

இறந்தோருக்கும் தீய ஆவியால் பீடிக்கப்பட்டோருக்கும் வாழ்வளித்து பாவிகளை மன்னித்து பல்லாயிரம் புதுமைகள் புரிந்த திருக்கரங்களுக்கு கிடைத்த பரிசு கூரிய ஆணிகள்.

இந்த ஆணிகளும் அதன் மேல் விழுந்த அடிகளும் யூதரால் மட்டுமா மேற்கொள்ளப்பட்டது? அவற்றின் மீது விழுந்த அடிகள் எம்மாலும் நிகழ்த்தப் பட்டவையே. இந்த மூன்று ஆணிகளும் குறித்து நிற்பது என்ன?

இறைவனுக்கும் தனக்கும் பிறருக்கும் எதிராகச் செய்யப்படும் துரோகங்களும் பாவங்களுமே இந்த மூன்று ஆணிகளின் அர்த்தமாகும். எமது குடும்ப உறவுகளை விரிசலாக்கி கணவன்–மனைவி, பிள்ளைகள்உறவுகளிடையே பகைமையை வளர்த்து நாம் பரிமாறிய சொற்கள் இந்த ஆணிகளைப் போன்றதில்லையா?

எனவே ஒரு வகையில் நாமும் இறை மகனை அறைந்த குற்றவாளிகளே. அவரவர் நிலையிலேயே பிறரை ஏற்றுக்கொண்டு ஒப்புரவாகி நட்புறவை புதிப்பிப்போம். எம்மால் அடுத்தவனுக்கு ஏற்பட்ட உள்ளக்காயங்களுக்கு பரிவு, மன்னிப்பு சமாதானம் என்னும் மருந்திடுவோம். அன்பென்னும் ஆணிகளை பிறர் இதயத்தில் அறைந்திடுவோம்.



**எஸ் . யேசுதாஸ்**

## இலங்கை மனித உரிமைகள்...

மனித உரிமை விடயங்கள் குறித்து அமெரிக்கத் தூதுவருடன் தான் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். அமெரிக்க அரசாங்கத்தின் அந்த அறிக்கை ஆதாரம் எதுவும் அற்றது என்றும் இராணுவ ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் தடுமாறிப் போயிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அது புத்துயிர் அளிப்பதாக அமைந்து விட்டது என்று அமெரிக்கத் தூதுவரிடம் தான் குறிப்பிட்டதாக அமைச்சர் போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில் தமது அரசாங்கம் உறுதியாகவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகமவைச் சந்தித்த பின்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வார ஆரம்பத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் மனித உரிமைகளுக்குப் பெறுமதியில்லை எனக் குறிப்பிட்டிருந்தது.

இது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்தித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்தாலும் அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் உறுதியாகவேயுள்ளது. அந்த அறிக்கையில் 196 நாடுகளின் நிலைவரங்கள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது.

இக் கருத்துக்களை அந்தந்த நாட்டு அரசாங்கமோ அல்லது வேறு கட்சியினரோ தமது தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கத்தை வழங்குவது வரவேற்கத்தக்கது.

இது தொடர்பாக நாம் தொடர்ந்து பேச்சுக்களை நடாத்துவதற்குத் தயாராகவேயுள்ளோம். இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத்தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## மணலாற்றில் தாக்குதல்

(கிளிநொச்சி)

மணலாறு கொக்குத்தொடுவாயில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வுத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 15ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் நேற்று மாலை படையினர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வுத் தாக்குதலை நடத்தினர்.

இம் முன்னகர்வுத் தாக்குதலுக்கு எதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி படையினரின் நகர்வினை முறியடித்துள்ளனர். இத் தாக்கு தலில் 15ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். பெருமளவான படையினர் காயமடைந்துள்ளனர் என புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கிளிநொச்சியிலுள்ள மக்களுக்கும் விரைவில் ஜனநாயக உரிமைகள்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

(கொழும்பில்)

கிழக்கில் இன்று மக்கள் அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகளை வடக்கின் கிளிநொச்சியிலுள்ள மக்களுக்கும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண விகாரைகளைப் புனரமைப்புக்கான நிதி வழங்கும் வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கிழக்கு மாகாண முக்கிய பௌத்த மதத் தலைவர்கள் பங்கேற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் எல்லைக் கிராமங்கள் பிரிக்கப்பட்ட யுகம் முடிபுக்கு வந்துள்ளது. சகல இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் சூழலை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம்.

கிழக்கு என்று சொல்லாமல் வடக்கு - கிழக்கு என அடையாளப்படுத்தப்பட்ட இம் மாகாணங்கள் இன்று பிரிக்கப்பட்டுள்ளன. ஒரே நாட்டில் எல்லைக்கிராமங்கள் எவ்வாறு இருக்க முடியும். ஆனாலும் கடந்த 30 வருடங்களாக அந்த நிலைமைதான் எமது நாட்டில் இருந்தது.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. இதில் 60 சதவீத மக்கள் வாக்களித்துள்ளனர். இங்குள்ள மக்கள் புலிகளின் அடக்கு முறைகளிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர்.

அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. மக்களுக்குக் கிடைத்துள்ள இந்தச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு சில சக்திகள் முயற்சிக்கின்றன. இச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது எமது கடமை.

சில அரசியல் கட்சிகள் இத் தேர்தலைப் பகிஷ்கரித்தன. பொய்த் தகவல்களைச் சர்வதேச சமூகத்திற்கு வழங்கி விஷமப் பிரசாரங்கள் செய்தன. எனினும் அவர்களது சகல முயற்சிகளும் பொய்த்துவிட்டன என்றார். (ச-5)

# மன்னாரில் 58-வது படைப் பிரிவு கவச வாகன அணியின் தளபதி பலி!

(கொழும்பு)

மன்னார் களமுனையில் விடுதலைப்புலிகளின் பொறிவெடியில் சிக்கிப் படைத் தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரிழந்தவர் லெப்.கேணல் கீர்த்தி ரணவக்க எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்னர் 58-வது படைப் பிரிவின் கவச வாகன அணியின் பொறுப்பதிகாரியாக இருந்த இவர், மன்னார் முன்னரங்க நிலைகளைப் பார்வையிடச் சென்றபோது பொறிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சைகள் பலனின்றி பின்னர் உயிரிழந்துள்ளார். இந்தப் படை அதிகாரி கவச வாகன அணிக்குப் பொறுப்பாக இருந்தபோது கப்டன் நிலையில் இருந்து மேஜர் நிலைக்குப் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

இவர் உயிரிழந்த பின்னர் படைத் துறையால் லெப்.கேணல் நிலை பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (எ-5)

## இந்தியாவின் அதிகாரம்...

கடிக்கப்பட வேண்டும் என அச் செய்திச் சேவைக்கு கூறியிருக்கும் ஹேரத், இலங்கையை அரசியல் ரீதியாகத் தீர்வு ஒன்றைக் காணுமாறு வலியுறுத்தாமல் இந்தியா இராணுவ ரீதியான உதவிகளைக் கொழும்புக்கு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

தமிழ் ஆயுதக் குழுவினருக்கு இந்தியா 1980களில் பயிற்சி அளித்ததுடன் அதன் இந்திய இராணுவம் இலங்கைக்குள் நுழைந்தது எனக் குற்றஞ்சாட்டியிருக்கும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் தற்பொழுது இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு இந்திய அரசாங்கம் முயற்சிக்கின்றது எனக் கூறியுள்ளார்.

1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு அமைய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் என இந்தியா விரும்புகின்றது. இது உள் விவகாரத்தில் தலையிடுவதாக அமைந்துள்ளது. இந்த விடயத்தில் சில இந்திய அதிகாரிகள் புதுடில்லியைப் பிழையாக வழிநடத்த முயல்கிறார்கள் என விஜித ஹேரத் தனது செவ்வியில் தெரிவித்தார்.

இந்தியா மாத்திரமின்றி எந்த நாடும் இலங்கையின் விவகாரத்தில் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லை.

அயல்நாடு என்ற ரீதியில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினால் அதில் தமக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிப்பதற்கு இந்தியா இலங்கைக்கு உதவி வழங்க வேண்டியது அதன் கடமை என இன்டோ ஏசியா செய்திச்சேவைக்குக் கருத்துத் தெரிவித்திருக்கும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் கூறியுள்ளார். (ச-5)

## யாழ்ப்பாணம்...

கொண்டார். சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ச)

## இந்தியாவின் ஆயுத உதவி...

சட்டத்தரணி சு.குமாரதேவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

முன்னதாக தேனிசைச் செல்லப்பாவின் இன எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. புதுவை பிரதேச விடுதலைச் சிறுத்தைகள், தமிழர் தேசிய இயக்கம், மீனவர் விடுதலை வேங்கைகள், மீனவ மக்கள் முன்னேற்ற இயக்கம், செந்தமிழர் இயக்கம், பகுஜன் சமாஜ் கட்சி, மக்கள் உரிமை கூட்டமைப்பு, அம்பேத்கார் தொண்டர் படை, மக்கள் குடியுரிமைக் கழகம், செம்படுகை நன்னீரகம், புரட்சிப் பாவலர் இலக்கியப் பாசறை, தனித் தமிழ்க் கழகம், சீனுவாசன் அறக்கட்டளை, தமிழினத் தொண்டு இயக்கம், வெள்ளையணுக்கள் இயக்கம், சமூக நீதி போராட்டக் குழு ஆகிய அமைப்புக்கள் இந் நிகழ்வுக்கு ஆதரவளித்துள்ளன. (ச-5)

## ரூபவாஹினி...

தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதுவரை 4 பணியாளர்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இந் நிலையிலேயே நேற்று 5-வது தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ரூபவாஹினியின் பிரதிப் பணிப்பாளர் அனுரசிறி ஹெட்டிகோவா தனது வீட்டிலிருந்து அலுவலகம் சென்று கொண்டிருந்த போது கெட்டியாவத்த பகுதியில் நேற்றுக் காலை 7.45 மணிக்கு அவர் தாக்கப்பட்டிருக்கின்றார்.

அவரது கழுத்துப் பகுதி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பெருமளவு இரத்தம் வெளியேறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்ட அவரை ரூபாவாஹினியின் பணியாளர்கள் பலரும் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ச-5)

## தாய்வானின்...

அரசாங்கமாக சீன மக்கள் குடியரசு உள்ளது.

தாய்வான் சீனாவின் பிரிக்க முடியாத பிரதேசமாகும். தாய்வான் தொடர்பிலான 1971 ஆம் ஆண்டு நிலையை மாற்றியமைக்கும் முயற்சியானது ஆசியப் பிராந்தியம் முழுமைக்குமான உறவுகளில் விரிசல்களை உருவாக்கும்.

சர்வதேச சமூகத்தின் கரிசனைகளைத் தாய்வான் மதிக்கும் என்று இலங்கை உறுதியாக நம்புகின்றது. ஆகையால் சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு என்று அழைக்கப்படும் நடவடிக்கையை தாய்வான் கைவிட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கொழும்பில்...

என்ற இடத்தில் வீட்டுத் தோட்டம் ஒன்றிலிருந்து தலையற்ற உடல் ஒன்று மீட்கப்பட்டது.

பொரளையைச் சேர்ந்த லக்மால் கிரிசாந்த (வயது-28) என்பவர் தலை துண்டிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டவர் ஆவார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். லக்மான் கிரிசாந்தின் தலையும் உடலையும் குடும்பத்தினர் அடையாளம் காட்டினர். (எ-5)


**நியூ சிற்றி றேட்**

சகல விதமான றேடியோக்கள், கசற் றெக்கோடர்கள், ரீவிக்கள், டெக்குகள், CD -DVD பிளேயர்கள், டிஸ் அன்ரனாக்கள், சார்ஜசர் லைற்றுகள், ஸ்ரப்பிளைசர்கள், றைஸ் குக்கர்கள், கிறைண்டர்கள், இவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனா வயர்கள், பூஸ்ரர்கள், வீட்டு மின்சாரப் பொருட்கள், கை-சுவர்-மேசை மணிக் கூடுகள், அயன்பொக்ஸ்கள், கொட்பிளேற்றுகள் ஆகியவற்றை நிதான விலையில் பெற்றுக் கொள்ள நாடவும்.

மேற்குறிக்கப்பட்ட பொருட்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி றேட்
135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (குளத்துக்கு முன்பாக)

(C-842)



**வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கை நெறிகள்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

New Examination Structure For IBSL Examinations

**DBF, CBF**

Your Path to an Internationally Recognized Professional Qualification in Banking & Finance

MBA Northumbria University/U.K | MBA Postgraduate Institute of Management (SL) (PIM) | MBA ICFAI (India)

Diploma in Banking & Finance (DBF)/AIB

Certificate in Banking & Finance (CBF)

Entry Requirements

| Any employee of a Bank/Financial Institution | G.C.E.(O/L) 6 Passes at One Sitting With Minimum 5 Credits including Mathematics and a Language. | G.C.E. (A/L) 2Passes AND G.C.E. (O/L) 6 Passes With 5 Credits including Mathematics and a Language |
|---|---|---|

In order to provide a better knowledge in Banking & Finance and to enhance the professional recognition IBSL will be launching its New Two Tier Examination Structure consisting of CBF and DBF levels commencing from March 2008 Examinations.

IBSL will also parallely conduct the CBF / ACBF/DBF examinations under the existing structure during the year 2008.

Further Details
Director
**Jaffna College Undergraduate Dept**
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

(C-860)



**தரம்:5-2008 புலமைப் பரிசில்**

வெற்றித்தேர்வு திருமலை எஸ்.கணேசலிங்கம் அவர்களின்

வெற்றித்தேர்வு வினாத்தாள் 1 முதல் 9 வரை

சகல புத்தகசாலைகளிலும்

வெற்றித்தேர்வு 9 மாவட்ட ரீதியிலான பரீட்சை
நாளை [illegible] ஞாயிறு

பொருத்தமான நேரத்தில் எத்தனை வெளிமாணவர்களும் பரீட்சை எழுதலாம்

6am, 8am, 10am, 2pm, 4pm

கட்டணம் ரூபா:30மட்டும்

பரீட்சை நடைபெறும் இடங்கள்.

நல்லூர் சயன்ஸ் அக்கடமி

கைதடி மின்னொளி கல்வி நிறுவனம் அஸ்ரன் கல்வி நிறுவனம்

நியூமர்ஸ் அக்கடமி சாவகச்சேரி ஆனைக்கோட்டை

முதலாந் தவணைப் பரீட்சை-2008 வினாத்தாள்

பூபாலசிங்கம், யாழ்நகர். துர்க்கா சுன்னாகம் புத்தகசாலைகளில் மட்டும்

அக்கடமி வெளியீடு என்று கேளுங்கள்.



**காணி தேவை**

நீர்வேலி, கோப்பாய், கோண்டாவில், உரும்பிராய், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் 3 பேஸ் மின்சாரம், நல்ல தண்ணீர் உள்ள 1-3 பரப்புக் காணி தேவை.

Mobile :- 0041 786080269 (SMS)
e-mail :- mail@net2000.ch

(C-859)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 15.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.